மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 4 சுற்றம் : 6 ஆகஸ்ட்டு 2016 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



# புதிய கல்விக் கொள்கை யாருக்காக?


சரளி
கலைக்கூடம்.A/c
திண்டிவனம்.
நுண்கலைகள் மற்றும் தற்காப்புக் கலையின் கலைக்கூடம்.
ISO : 9001 - 2008 தரச்சான்று பெற்ற கலைக்கூடம் ,
நிர்வாகம் : சரளி ஃபவுண்டேஷன் , அரசு அங்கிகாரம் பெற்ற கலைக்கூடம்.
Web Site : www.saralifoundation.com
email: saralifoundation@gmail.com
93444 60122, 93444 60222
Office : 04147 - 22 4147
சரளி கலைக்கூடத்தின் பரதநாட்டிய அறங்கேற்ற விழாவில் ISO 9001 : 2008 சான்று வழங்கப்பட்டது
பரதநாட்டிய அறங்கேற்றவிழாவில் குரலிசை நூலை திரு R.மாணிக்க வினாயகம் அவர்களால் வெளியிடப்பட்டது.
Happy Independence day
நமது சரளி கலைக்கூடம் 15-08-2016 அன்று 15- வது ஆண்டில் அடி எடுத்துவைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்
சுதந்திர தின நல்வாழ்த்துகள்.

மனிதமே முதன்மை!

# முற்றம்

Mutram monthly August 2016

பல்சுவை இதழ்

ஆசிரியர்
**விசவனூரர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம்.ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம்.ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜான்டேவிட்**
**பெ. அர்ஜுன், ஜூட் ஜஸ்டின்,**
**ஜே.எம். ஆண்டனி**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**டி. வி. ரமணி**
**குமார் செங்கல்பட்டு**
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**

அலுவலக முகவரி
124 என்.டி.ஆர். தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை – 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

புதிய கல்விக் கொள்கை (தலையங்கம்)....4

இராஜராஜசோழன்இடம் நான் வியந்தது.... 6

உண்மை ஒரு நாளும் மறையாது
*இராஜாசிங்*.... 9

சமற்கிருதம் : பெரியார் பார்வையில்.... 11

மானம் (சிறுகதை)
*இருங்கோவேள்*.... 13

கறிவேப்பில்லை: கணக்கற்ற நன்மைகள்.... 15

அறிந்து கொள்ளுங்கள்
எழுத்துவேற்படுதலால் பொருள் மாறுபடுதல்.... 16

கோயில் சொத்துக்களை மீட்கும் வழக்கில்
உச்ச நீதி மன்றத்தில் வீரத்தமிழர் முன்னணி.... 18

உடல் என்னும் கடிகாரம்.... 20

சங்கம் 4
தென் மதுரைத் தமிழ் விழா.... 22

சுடுகின்ற தனிமை (சிறுகதை)
*கவிஞர் ந. இராஜராம்*.... 27

நா. முத்துக்குமார் : எளிமையின் வண்ணத்துப் பூச்சி
*ஆர்.சி. ஜெயந்தன்*.... 30

சித்த மருத்துவ அழகுக் குறிப்புகள்.... 33

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



புதிய கல்விக் கொள்கைக்கான வரைவு, சிறுபிள்ளைகளின் மனதிலே பாகுபாட்டை, பகையுணர்ச்சியை, அறிவாளி, முட்டாள் என்ற வேறுபாட்டைக் கொண்டு வருவதாகத்தான் இது இருக்கிறது. ஒரு மாணவன் ஐந்தாம் வகுப்பில் சரியாகப் படிக்கவில்லை என்றால் அவன் சரியாகவே படிக்க மாட்டான். ஆகவே அவன் குலத் தொழிலைச் செய்ய வேண்டும். அதாவது தொழிற்கல்வி என்ற போர்வையில் குலக்கல்வி முறை. எத்தனையோ பேர் பள்ளிகளில் சரியாக படிக்காமல் உயர்கல்வியில் கொடி நாட்டி யிருக்கிறார்கள். அம்மாதிரியான வளர்ச்சி முட்டுக் கட்டை போடுவதுதான் இந்தக் கொள்கை வரைவு. இதற்கு பக்க ஆதரவாக 16 வயதுக்கு மேல் உள்ளவர்கள் வேலை செய்யலாம் என்று இருந்ததை 14 வயதிற்கு கொண்டுவந்து விட்டனர். இதெல்லாம் எதற்கு பார்ப்பணர்களைத் தவிர மற்ற அனைவரையும் குலத்தொழில் செய்ய வைப்பதற்காகத்தான்.

மாநில உரிமைகளை நசுக்கும் செயலாகவும் இது இருக்கிறது. மாநில மொழிகளுக்கு எந்த முன்னுரிமையும் இல்லை. மாநில அரசுக்கும் கல்விக் கொள்கைக்கும் எவ்வித சம்பந்தமும் என்ற நிலையை இது கொண்டு வருகிறது. அதோடு ஆசிரியர்களுக்கு தங்களது பணியில் நம்பகமற்ற தன்மையைத் தோற்றுவிப்பதாகவும் இந்தக் கல்விக் கொள்கை இருக்கிறது.

சமஸ்கிருதம் பாடமாக்கப்பட வேண்டும். சமஸ்கிருதத்தை ஏற்றுக் கொள்ளாத பள்ளிகளுக்கு அங்கீகாரம் இரத்து. சுமார் 20ஆயிரம் பேர் மட்டுமே பேசும் இந்த செத்த மொழியை எதற்கு இவர்கள்

# புதிய கல்விக் கொள்கை?



தூக்கிப் பிடிக்கிறார்கள் என்று தெரியவில்லை. சமஸ்கிருதம் அண்மைக்கால மொழி. அதற்கென்று வரலாறு கிடையாது. தமிழுக்குப் பின் எத்தனையோ மொழிகள் அதற்குப் பின் சமற்கிருதம். கட்டப்பட்ட மொழி, எங்கெங்கோ எடுத்து ஒன்று சேர்த்து செம்மை செய்யப்பட்ட மொழி சமஸ்கிருதம். விவேகானந்தர் சொல்லியிருக்கிறார். தமிழை சமஸ்கிருதத்துடன் ஒப்பிடக்கூடாது அது பிழை என்று. தமிழின் பெருமை அவருக்குத் தெரிந்ததால் அவ்வாறு கூறினார்.

தமிழ் எப்போதும் தனித்து நிற்கக்கூடிய மொழி. ஆனால் சமஸ்கிருதம் அரசுகளை காக்காய் பிடித்து வளர்ந்த மொழி. அது அரசின் பக்கம்தான் எப்போதும் இருக்கும். இந்த மொழிக்கு ஒட்டுமொத்த இந்திய மக்களின் வரிப்பணத்தை எடுத்து செலவு செய்வது என்பது பார்ப்பனியத்தின் வஞ்சகச்செயல். சமஸ்கிரும் நல்ல மொழி, தேவ மொழி என்றெல்லாம் சொல்கிறவர்கள் ஒரே ஒரு நாளிதழை சமஸ்கிருதத்திலே நடத்திப் பாரக்கட்டுமே. முடியுமா? முடியாது. மற்றவர்களின் மேல் குதிரைச் சவாரி செய்வதே சமஸ்கிருதத்தை தூக்கிப் பிடிப்போரின் வேலை. சமஸ்கிருத மொழி உடல் நலத்துக்கே கேடு என்று ஆராய்ச்சியாளர்கள் சிலர் கூறுகிறார்கள்.

தமிழிலே கிடைக்கப்பட்ட பல்லாயிரக் கணக் கான ஓலைச்சுவடிச் செய்திகளை தங்களுக்கு சாதமாக எழுதிக் கொண்டு, அந்த ஓலைச் சுவடி களை எல்லாம் தீயிட்டுக் கொழுத்தி விட்டனர் பிராமணர்கள் என்று கூறியிருக்கிறார் சூரிய நாராயண சாஸ்திரி என்ற பிராமணர். சமுதாயத்தில் ஒருவன் அறிவாளியாக இருந்து விட்டால் அவனை பிராமணனாக்கி விடுவது பிராமணியத்தின் சூழ்ச்சிகளில் ஒன்று. தொல்காப்பியர், வள்ளுவரை எல்லாம் பிராமணர்கள் என்று சொன்ன வஞ்சக வரலாறெல்லாம் உண்டு.

யோகாவை கொண்டு வரவேண்டு மென் கிறார்கள். இந்த யோகா யாருடைய செல்வம் தெரியுமா? தமிழர்களுடையது. ஓகம் என்பதைத் தான் தமிழ் முனிவர்களிடமிருந்து அபகரித்து தங்களுடைய கண்டுபிடிப்பு போன்று காட்டிக் கொள்கின்றனர். தமிழ்ச்சமுதாய விரோதிகள். ஒரு குழந்தை உருவாகி, பிறந்து, நடக்கும் வரையில் அந்தக் குழந்தையின் செயல்பாடகளை ஆய்ந்து கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கலையே ஓகம் (யோகா). அதை தங்களது கண்டுபிடிப்பு என்பது போல் காட்டிக் கொள்கிறது ஒரு கபடக்கூட்டம். பிராமணியம் சொன்னபடி எந்த பிராமணனன் நடந்து கொள்கிறான்? கடல் கடந்து செல்லக் கூடாது என்கிறார்கள். ஆனால் பிராமணர்களில் யார் கடல் கடக்காமல் இருக்கிறார்கள்? இங்கிருந்து கொண்டு நாங்கள்தான் உண்மையான தேச பக்தர்கள் என்று போலி வேசம் போட்டுக் கொண்டு அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் சேவகம் செய்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அந்த நாடு களுக்கு முகவர்களாகவும் செயல்படுகின்றனர்.

இப்படிப்பட்டவர்கள் கொண்டு வரும் கல்விக்கொள்கை எப்படி இந்தியாவின் எல்லா மக்களுக்கும் எப்படி ஏற்புடையதாக இருக்கும்? இந்த வரைவை முளையிலே கிள்ளி எறியாவிட்டால் இந்திய நாடு 300 ஆண்டுகளுக்கு மேல் பின்தங்கிய நாடாக மாறிப்போய்விடும் என்பதற்கு சந்தேகம் இல்லை. இம்மாதிரியாக கல்விக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பது நம் தலையில் நாமே மண் அள்ளிப் போட்டுக் கொள்வது போலத்தான். ●

**முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்**

**பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-**
**பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-**
**கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-**
**கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-**
**க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-**

**சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-**
**ஆண்டு சந்தா ரூ. 120/-**



# இராஜராஜ சோழனிடம் நான் வியந்தது

1000 வருடங்களுக்கு முன் தென்னிந்தியாவை ஆண்ட மிக பெரிய சாம்ராஜ்யத்தின் அரசன் ஏன் வட இந்தியாவை நோக்கி படையெடுக்காமல் சிவனுக்கு மிகப்பெரிய ஆலயம் கட்டினான்? என்ற கேள்வி பலருக்கும் எழலாம்.

ராஜராஜசோழனின் ஆட்சி காலம் (985 - 1014) தான் தமிழ் வரலாற்றின் பொற்காலம் பொருளா தாரம் கட்டிடக்கலை, சிற்பக்கலை, வணிகம், நாகரிகம், விவசாயம், கலாச்சாரம், உணவு முறை, போர்ப்படை என்று அனைத்திலும் சோழ தேசம் மற்ற தேசங்களைக் காட்டிலும் பல மடங்கு முன்னேறி இருந்தது.


தென்னிந்தியா முழுவதையும் தன் குடைக்கீழ் கொண்டு வந்த சோழனுக்கு தன் நாட்டின் வளர்ச்சியையும் நாகரிகத்தையும் காலத்தால் அசைக்க முடியாதபடி வரலாற்றில் பதிவு செய்ய வேண்டும் என்று ஒரு ஆசை.

அந்த ஆசையின் முழு வடிவமே இன்று உலகம் வியக்கும் க்ரானைட் கற்களால் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோவில். இந்தப் பதிவு கோவில் கட்டப்பட்ட தொழில்நுட்பத்தை பற்றியது அல்ல அதை விட மிக கடினமான மற்ற துறைகளை பற்றியது.

தஞ்சை பெரிய கோவில் தன் காலத்தில் இருந்த மற்ற கோவில்களை விட 40 மடங்கு பெரிய கோவில். கோவில் கட்டுமானத்தில் மரம் இல்லை.

சுடு செங்கல் இல்லை பராங்கல் இல்லை மொத்தமும் நீலம் ஓடிய, சிவப்பு படர்ந்த உயர்ந்த கிரானைட் கற்கள் மட்டுமே. சிற்பங்கள் மற்றும் மிக நுண்ணிய வேலைப்பாடுகள் உட்பட அனைத்திலும் க்ரானைட் கற்கள்தான்.

1,30,000 எடையுள்ள கற்களைக் கொண்டு கோவில் எழுப்ப வேண்டும்




என்றால் கோவில் அஸ்திவாரம் எந்த அளவுக்கு பலமாக இருக்க வேண்டும். அதேபோல் கர்ப்பக்கிரகத்துக்கு மேல் 216 அடி கூர்நுனி வெற்று விமானம் (HollowTower).

கர்ப்பக்கிரகத்துல இருந்து பார்த்தா விமானம் உச்சி தெரியும். விமானத்தின் மேல் 8 நந்தி சிலைகள் வேறு. கட்டிடக்கலையின் உச்சபட்ச அறிவு இல்லாமல் இது சாத்தியம் ஆகிருக்காது.

1000 வருடங்களுக்கு முன் தஞ்சை கோவில் கட்டும்பொழுது அது தான் இந்தியாவின் மிகப்பெரிய விமானம் கொண்ட கோவில். விமானம் முழுக்க கிரானைட் கற்களை சிற்பமாக செதுக்க வேண்டும். மேற்கூறிய கலசத்தை வேறு ஏற்ற வேண்டும் என்றால் மிக பெரிய சாரத்தை கோவில் விமானம் சுற்றி கட்ட கட்டிடக்கலை நிபுணர்கள் எவ்வளவு துல்லியமாக ஆராய்ந்து இருப்பார்கள். எவ்வளவு கயிறு, மரக்கட்டை வேண்டும் என்றும் தீர்மானிக்க வேண்டும். இவை அனைத்திற்கும் சிறந்த கணித அறிவு நிச்சயம் தேவைப்பட்டு இருக்கும்.

தஞ்சை பெரிய கோவிலை கட்ட 7 வருடம் ஆனது என்று வரலாறு சொல்கிறது. கோவிலை ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கைதிகளின் உதவியுடன் தான் காட்டியுள்ளனர். கைதிகள் மட்டும் இல்லை மக்களின் உதவியும் கூட.

கைதிகளை வைத்து தானே கட்டினார்கள் என்று ஏளனமாக நினைக்க வேண்டாம், சற்று யோசித்துப் பாருங்கள், இன்றைய நிலைமையில் டெல்லி நகரில் ஒரு லட்சம் கைதிகளை வைத்து ஒரு கட்டடம் கட்ட வேண்டும் என்றால், நம் மிலிட்டரி எவ்வளவு கட்டுக்கோப்பாக இருக்க வேண்டும். நம் பாதுகாப்பு எவ்வளவு நேர்த்தியாக இருக்கவேண்டும். ஒரு நிமிடம் அசந்தாலும் நாட்டின் தலைநகரம் வரைபடத்தில் இருந்து காணாமல் போய்விடும். எந்த நேரம் வேண்டு மானாலும் கைதிகள் கலவரத்தில் ஈடுபடலாம்.



தற்கொலை தாக்குதல் நடத்தலாம். எந்த அளவுக்கு சோழ காவல் படை செயல்பட்டு இருந்தால் 7 வருடமாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பரம எதிரி நாட்டு கைதிகளை வைத்து தஞ்சைத் தலைநகரில் வேலை வாங்கி இருப்பார்கள்.

7 வருடம் கைதிகளை அடக்கி ஒடுக்கி வேலை வாங்குவது சாத்தியம் இல்லை, அதேபோல் மற்ற கட்டிடக்கலை வல்லுனர்களும் மனம்கோணாமல் வேலை செய்ய வேண்டும். மக்களிடம் இருந்தும் எதிர்ப்பு வராமல் பார்த்து கொள்ளவேண்டும் என்றால் HRM எனப்படும் மனித வள மேலாண் மையை மிக நேர்த்தியாக நடைமுறை படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு ஓங்கி உயர்த்து நிற்கும் கோவில் தான் சாட்சி.

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கைதிகள், ஆயிரம் ஆயிரம் யானைகள், குதிரைகள், 1000க்கும் மேற்பட்ட சிற்பிகள், ஓவியர்கள், ஆசாரிகள், கொல்லர்கள், நடனக்கலைஞர்கள், சமையல் வேலையாட்கள், கற்களைக் பிளக்கும் வீரர்கள் என ஒரு மாபெரும் படைக்கும் 7 வருடம் உணவு வழங்க வேண்டும் என்றால் தொடர்ச்சியாக 7 வருடம் சோழதேசத்தில் விவசாயம் மற்றும் பொருளாதாரம் தங்குதடை இல்லாமல் இருந்திருக்க வேண்டும். ஒரு முழு படைக்கும் தேவையான மருத்துவ வசதியும் சிறப்பாக இருந்திருக்க வேண்டும்.

7 வருடம் கோவில் கட்ட தேவையான பொருட்செலவை ஈடு கட்ட தொடர்ச்சியாக போர்களும் நடந்து இருக்க வேண்டும். வெற்றியும் அடைந்து இருக்க வேண்டும். அதே நேரத்தில் எதிரிநாட்டு படையெடுப்பையும் தடுத்து இருக்க வேண்டும்.

ஒரு வேலை ராஜராஜ சோழனோ, இல்லை மற்ற மூத்த கட்டிடக்கலை நிபுணர்கள் இறந்தாலும் கோவில் வேலை தடை இல்லாமல் தொடர சுமார் 1000 வரைபடங்களை தயார் செய்து இருக்கிறார்கள்.

கிரானைட் கற்களை செதுக்க என்ன வகை உளி, இரும்பு பயன்படுத்த வேண்டும் என்று முன்பே கொல்லர்கள் ஆராய்ச்சி செய்து இருக்க வேண்டும். அதேபோல் கற்களை நெம்பித்தூக்க உதவும் கம்பிகளை தயார் செய்ய வேண்டும் என்றால் பழுக்கக்காய்ச்சி உரமேற்றும் உத்தியும் தெரிந்திருக்க வேண்டும்.

தஞ்சையைச் சுற்றி 50 கிலோ மீட்டருக்கு க்ரானைட் கற்கள் கிடையாது. கோவில் கட்ட தேவையான கற்களை திருச்சிக்கு சற்று தெற்கே 50 கி.மீ.தூரத்தில் உள்ள நார்த்தாமலையில் இருந்து கொண்டு வரவேண்டும் என்றால் சோழதேசத்தின் சாலைகள் மற்றும் போக்குவரத்தும் மிக மிக தரமாகவும் சீராகவும் இருந்திருக்க வேண்டும்.

இது எல்லாவற்றையும் சமாளித்தலும் மிக பெரிய பூதம் ஒன்று உள்ளதே, அது தான் அரசியல் எந்த ஒரு சாம்ராஜ்யமாக இருந்தாலும் அரசியல் குழப்பம் இருக்காமல் இருக்காது. 7 வருடம் அரசியல் குழப்பம் எதுவும் நடக்காமல் மிக நேர்த்தியாக ஆட்சி செய்திருக்க வேண்டும். சோழ அரசியிலில் பெண்களின் பங்கு கவனிக்கத்தக்கது ஆண் மகன்கள் கோவில் வேலையில் மும்முரமாக இருக்க பெண்கள், அரசு இயந்திரத்தை திறன்பட இயக்கியுள்ளனர் என்று வரலாறு சொல்கிறது.


1000 வருடம் 6 நிலநடுக்கத்தை கண்டும் அசராமல் நிற்கும் தஞ்சை பெரிய கோவில் ஒரு அதிசயமே. ●



# உண்மை ஒரு நாளும் மறையாது

**இராஜாசிங்**





காங்கிரஸ்சாரின் கடந்த கால ஆட்சி சட்டத்தின்படி நடைபெற்று வந்த ஆட்சி தனி மனிதர்களின் விருப்பு, வெறுப்புக்கு அப்பாற்பட்டு இந்திய நாட்டின் இறையாண்மைக்கு எவ்வித பாதிப்பும் வராமல் சட்ட விதிகளின் அடிப்படையில் ஆட்சி நடைபெற்றது.

அமரர் ராஜீவ்காந்தி அவர்கள் ஏழையின்பால் மிகுந்த அன்பும், மனிதநேயமும் கொண்டவர். அவர் ஏழைகளின் வாழ்க்கையில் முன்னேற்றத்திற்காக பல காரியங்களைச் செய்துள்ளார். அவர் காலத்தில் தான் இந்தியாவில் அதிரடிப்படைப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. இன்று உலக அரங்கில் இந்திய அதிரடிப்படை புகழ்பெற்று விளங்குகிறது. அவர் காலத்தில் தான் கணினி வந்தது இந்தியர்கள் கணினியில் தலை சிறந்து விளங்குகின்றனர். அவர் மீண்டும் ஆட்சிப் பொறுப்பு ஏற்று இருந்தால் உலக அரங்கில் இந்தியா தலை சிறந்த வல்லரசாக மாறி இருக்கும். இதை உணர்ந்த சிலர் அவரை நயவஞ்சகமாக கொலை செய்து, அக்கொலையை தமிழர்கள் மீது திணித்து உள்ளனர்.

சுப்ரமணியசாமி இப்போது ஒரு கருத்தை சொன்னார். அக்கருத்து என்னவென்றால், காங்கிரஸ் ஆட்சி காலத்தில் ப.சிதம்பரம் அவர்களால் சில அதிகாரிகள் நியமிக்கப் பட்டுள்ளனர். அவர்கள் இன்று ப.சிதம்பரத்திற்கு விசுவாசமாய் வேலை செய்கின்றனர் என்று கூறி இருந்தார். ஆனால் ராஜீவ்காந்தி கொலை செய்யப்படுவதற்கு முன்பு சுப்ரமணியசாமி சட்ட அமைச்சராக பொறுப்பு ஏற்று இருந்தார். அப்போது அவர் என்ன செய்தாரோ தெரியவில்லை. ராசீவ் காந்தி கொல்லப்படுவதற்கான சூழ்நிலையை யார் உருவாக்கினார்கள் என்று விசாரிக்கவில்லை. அதன் பின்னர் கொலையை தமிழர் மீது சுமத்தி இணக்கமான விசாரணை அதிகாரிகளை உருவாக்கி அப்பழியை தமிழர்கள் மீது போட்டுள்ளனர் என நாம் உணரலாம்...

ஆனால் உண்மை மறைக்கப்படுவதை உணர்ந்த காங்கிரஸ் தலைமை சட்டத்தின் வாயிலாக பல ஏற்பாடுகளை செய்து உண்மையை வெளிக் கொண்டு வருவதற்கான பல முயற்சிகளை எடுத்தனர். (உ.ம்)...வர்மா கமிஷன், ஜெயின் கமிஷன், எம்.டி.எம்.ஐ. அமைப்பு முதலியவைகள் அமைக்கப்பட்டது. ஆனால் பி.ஜே.பி ஆட்சி காலத்தில் அவைகள் நீர்த்து போக வைக்கப்பட்டு, பின் செயல் இழக்கச்

செய்யப்பட்டது. (உ.ம்) (1) ஜெயின் கமிஷனால் குற்றம் சாட்டப்பட்ட சுப்ரமணியசாமி இன்று வரை விசாரிக்கப் படவில்லை.

அதற்கான நடவடிக்கையும் இல்லாமல் உள்ளது. (2) சுப்ரமணியசாமி தனக்கு வேண்டிய அதிகாரிகளை அதிகாரத்தில் வைத்ததன் மூலம் ஜெயின் கமிஷன் முன்பு திருச்சி வேலுசாமி ஆஜராக சென்ற போது திருப்பி அனுப்பப்பட்டார். பின்னர், பிரியங்கா காந்தி துணையுடன் அவர் ஜெயின் கமிஷன் முன்பு ஆஜர் ஆனார். (3) தமிழர்கள் கொலை செய்யவில்லை என்பதால் தான் நளினிக்கு தூக்கு தண்டனையை ரத்து செய்ய ஏற்பாடு செய்தார்கள் போலும்,

மேலும், 7 பேரின் தூக்கு தண்டனையின் கருணை மனு மீது நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தப்பட்டதும், தமிழர்கள் ராஜீவ்காந்தியை கொலை செய்யவில்லை என தெளிவாகத் தெரிந்ததின் விளைவாக ஏற்பட்ட செயலாக இதை நாம் பார்க்கலாம்.

(4) முன்னாள் பாரத பிரதமர் வாஜ்பாய் உண்மையை மறைப்பதற்காக ராஜீவ்காந்தியை கொன்றது தமிழர்கள் என்று பொய்யான வார்த்தையை கூறினார். ராஜீவ்காந்தியை கொன்ற தமிழர்களுடன்காங்கிரஸ் கூட்டணி வைத்துள்ளது. இதனால் தான் அன்னை சோனியா காந்தி அவர்கள் தெளிவாக வாஜ்பாய் அவர்களை பைத்தியகாரர் என்று கூறி உள்ளார் போலும். இதனால் காங்கிரஸ் தலைமைக்கு ராஜீவ்காந்தியை கொன்றது தமிழர்கள் அல்ல, இங்குள்ள சில சதிகாரர்கள்தான் என்று உறுதியாகத் தெரிந்து இருக்கின்றது. அதனால் அன்னை சோனியா காந்தி அவர்கள் வாஜ்பாயை பைத்தியகாரன் என்று தெளிவாய் கூறியுள்ளார்.

காங்கிரஸ் சட்டத்தின்படி ஆட்சி செய்ததால், இதை சட்டப்பூர்வமாக நிரூபிக்கும்படி பல கட்டத்திலும் போராடி கொண்டிருக்கின்றது. சிலர் தவறுதலான ஒரு சில அதிகாரிகளின் துணையுடன் இதற்கு எதிராக எல்லா வேலையையும் செய்து வருகின்றனர்.

உள்துறை அமைச்சராக ப.சிதம்பரம் இருந்தபோது உண்மை குற்றவாளிகளைப் பற்றி சில ஆவணங்கள் எம்.டி.எம்.ஐயின் மூலமாக அவர் கையில் வந்து சேர்ந்து இருக்கும் என நினைக்கத் தோன்றுகிறது. இதனால் எவ்விதத்திலும் சம்மந்தம் இல்லாத ப. சிதம்பரத்தின் மீது அவதூறுகளை முன்னாள் விசாரணை அதிகாரிகள் கூறுவது வாடிக்கையாகி விட்டது.

எனவே, உண்மையான தமிழக காங்கிரஸ்சார், போலி குற்றவாளிகளை விடுதலை செய்து உண்மை குற்றவாளியை சிறைக்கு அனுப்ப வேண்டும்.

மேலும் இலங்கையில் 2009ஆம் ஆண்டு போரின்போது இந்திய அரசுக்கு தவறுதலான தகவலை கொடுத்த அதிகாரிகளை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும். எப்படி எனில், கலைஞர் உண்ணா நோன்பு இருக்கச் சென்ற நேரத்தில் போர் நின்று விட்டது என்று உண்மைக்கு மாறாக கூறிய அதிகாரியை விசாரணை வளையத்துக்குள் கொண்டு வருவார்களேயானால், உண்மை நிலவரம் உலகத்திற்கு தெரியும். இன்று அந்த அதிகாரிகள் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருக்கின்றனர் என்பது வெட்ட வெளிச்சமான உண்மை. இது எப்படி என்று மக்கள் உணர்வார்கள்.

தமிழகத்தில் ஒரு நடைமுறை வழக்கம் உள்ளது. அதாவது எவ்வளவு பெரிய கொடூர குற்றமாக இருந்தாலும், அதை நீதிமன்றத்தில் நீர்த்துப் போகச் செய்ய வேண்டும் என்றால் இதில் சம்மந்தம் இல்லாத உயர் அதிகாரிகள் சிலரை சம்மந்தப்படுத்தி சேர்ப்பார்கள். அப்போது அந்த கடும் குற்றச் செயல், உண்மை குற்றவாளிகளும், உண்மையும் வெளிவராமல், நீதிமன்றத்தில் நீர்த்துப் போகும். அது போல இதில் சம்மந்தம் இல்லாத பல காங்கிரஸ்காரர்கள் சேர்க்கபபட்டுள்ளனர். இதனால் உண்மை குற்றவாளிகள் தப்பிப்பதற்கு ஏதுவாக அமைந்து உள்ளது. ஆனால், உண்மை ஒரு நாளும் உறங்காது, உண்மை ஒரு நாளும் அழியாது, உண்மை ஒரு நாளும் மறையாது. "என்றும் தமிழனின் புகழ் ஓங்கி நிற்கும்."



**நம் காமராசர்**

கல்வி என்பது பெருஞ்செல்வம் – அதை
கொடுத்தவர் பெருந்தலைவர் காமராசர்
சிறுவயதில் ஏழை பணக்காரப் பேதம் அழிக்க
சீருடை தந்தார் கர்மவீரர் காமராசர்
மாநில மக்களை தன்மக்களாய் எண்ணி
மணமே புரியாது வாழ்ந்தவர் காமராசர்
பொதுவாழ்வின் இலக்கணமாய்
போற்றப்படும் மாமனிதர் காமராசர்
பச்சைத் தமிழர் என்று பார்போற்ற
பாங்குடன் வாழ்ந்தவர் நம் காமராசர்.



19 53ஆம் ஆண்டு தந்தை பெரியார் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையின் தோற்றுவாய்.

பழங்காலத்தில் சமஸ்கிருதம் என்பதாக ஒரு மொழி இருந்திருக்கவில்லை. சமஸ்கிருதம் பழங்காலத்தில், பலர் பலவிதமாகப் பேசி வந்த பல மொழிகளிலிருந்து சொற்களைச் சேர்த்து உருவாக்கப்பட்ட ஒரு புது மொழியாகும்.

சமஸ்த்தம் கிருதம் சமஸ்கிருதம்
சமஸ்த்தம் யாவும்
கிருதம் சேர்த்துச் செய்தது என்பது பொருள்.
பார்ப்பனர்கள் சமஸ்கிருத மொழியைப் பேசுவதில்லை.

அவர்களது லவுகீக வாழ்க்கையில் உலக வழக்கில் எந்தக் காரியத்திற்கும் அவர்கள் சமஸ்கிருதத்தைக் காரியத்தில் பயன்படுத்துவதும் இல்லை.

சமஸ்கிருதம் பார்ப்பனர்களுக்கும் மற்றும் எவர்க்கும் எந்தக் காலத்திலும் தாய்மொழி யாக, பேசும் மொழியாக இருந்ததும் இல்லை.

இப்பார்ப்பனர்களின் மூதாதையர் என்பவர்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டில் வசித்தவர்கள் அல்ல, அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஏதாவது ஒரு மொழியையே பேசி வந்தவர்களும் அல்ல. அவர்கள் வாழ்ந்த நாடு பல நாடுகள். அவர்கள் பேசிவந்த மொழிகள் பல மொழிகள்.

# சமற்கிருதம் பெரியார் பார்வையில்

இந்த உண்மைகளை ஒரு அளவுக்கு விளக்கவே சமஸ்கிருதம் பற்றிய கட்டுரையில் குறிப்பாகச் சிலவற்றை விளக்குவோம்.

இதுபோலவேதான் பார்ப்பனர் மதமான இந்துமதமும் ஆதாரமும் அடிப்படையும் இல்லாமல் எதை எதையோ சேர்த்து, கதம்பமாகக் கற்பித்துக் கொண்ட மதமாகும்.

மற்றும் இதுபோலவே தான் பார்ப்பனர்களுடைய பல கடவுள்களும் பல நாட்டு மக்கள் காட்டுமிராண்டித் தன்மையில் அவரவர்கள் சவுகரியத்திற்கு ஏற்ப சமயோசிதம் போல் கற்பித்துக் கொள்ளப்பட்டவைகளை, தாங்களும் அதே தன்மையில் தங்களுக்கும் ஏற்படுத்திக் கொண்டவை ஆகும். இவற்றைப் பற்றி பின்னால் விளக்குவோம்.

பார்ப்பனர்களுக்கு அடிப்படை ஆதாரம் என்பது யாவற்றிற்கும் வேதமாகம். அந்த வேதம் ஒன்றல்ல, பல.

அவை ஒருவரால் அல்ல, பல பேர்களால் சொல்லப்பட்டவை.

அந்தப்படிச் சொல்லப்பட்டதும் ஒரு காலத்தில் அல்ல, பல காலங்களில்.

அவை ஏதாவது ஒரு குறிப்பில் குறித்து வைக்கப்பட்டிருந்தவை அல்ல, வாய்ச் சொல்லில் வாக்கு ரூபமாக இருந்து, அடிக்கடிக் கூட்டியும் குறைத்தும் திருத்தியும் கூறி வந்தவையாகும்.

அவைகளும் காலத்துக்கு ஏற்பப் பலரால், சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்பப் பொருள் கூறப்பட்டு வந்ததும், பிறகு அப்பொருளுக்கு ஏற்ப மூலம் மாற்றப்பட்டு வந்ததும், இன்றைக்கும் விவாதத்திற்கு நிற்காத முறையில் உருவாக்கப்பட்டதாகும்.

வேதத்தின் துவக்கமானது செல்வம், பொருள், சுகபோகம் பற்றிய பேராசை இலட்சியமேயாகும்.

பிறகு, இந்நாட்டுப் பழங்குடி மக்கள் வாழ்க்கையைப் பார்த்து பொறாமையும் ஆத்திரமும் கொண்டு அவர்களை எதிரிகளாகக் கருதி வசவு கூறிச் சாபம் இடுவதேயாகும்.

இவைகளுக்கு ஏற்பக் கற்பித்துக் கொண்டவை தான் வேதத்தில் காணப்படும் தேவர்கள் என்பவர்களுமாகும்.

அவைகளும் காலத்துக்கு ஏற்பக் கற்பனையும் முக்கியத்துவமும் கொண்டவைதான்.

## உடல் வெப்பம் குறைக்க என்ன வழி?

கோடையில் சுற்றுப்புறவெப்பம் மட்டுமின்றி, நமது உடல் வெப்பமும்அதிகரிக்கிறது. இதனால், பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. சிறுநீர் கழித்தலில் தொல்லை, வியர்வை கோளங்களில் அடைப்பு, தோல் நோய்கள், தோலில் கிருமிகள் வளர்ச்சி,நாவறட்சி, அதிக தாகம், கண்மற்றும் உடல் எரிச்சல், மலச்சிக்கல், நீர்ச்சத்து குறைவால் திடீர் மயக்கம், வெப்பத்தாக்குதல், மூர்ச்சை யாதல் தொந்தரவுகளை நீக்க சித்த மருத்துவம் பற்றி டாக்டர் ஜெ.ஜெயவெங்கடேஷ் கூறியதாவது:

உடல் வெப்பம் அதிகரிப்பால் மலச்சிக்கல், கபால அறை மற்றும் உள்ளுறுப்புகளில் வறட்சி ஏற்பட்டு நீர்கோர்த்தல், தூக்கமின்மை, சுவையின்மை, தோல் மற்றும் அவயங்களில் ஒருவித கசகசப்பு ஏற்படும். உடல் பருமனாக இருப்பது போன்ற உணர்வு, தோல் நிற மாற்றம், பல் கூச்சம், கொட்டாவி, மயக்கம், குடைச்சல் ஏற்பட்டு கிறுகிறுப்பு, அதிவியர்வை வெப்பத்தால் தோன்றும் துன்பங்கள் என அகத்தியர், யூகி முனிவர் குறிப்பிடுகின்றனர். இதை தணிக்க உணவில் காரம், புளிப்பு, உப்பை குறைக்க வேண்டும். அனல் அருகில்இருத்தல், வெயிலில் அலைச்சலை தவிர்க்க வேண்டும். நன்கு தூங்க வேண்டும். பங்குனி, சித்திரையில் பித்தநோய் எல்லை மீறி, உடல் முழுவதும் பரவி 42 வகை பித்த நோய்களாக உருவாகின்றன.

ஒரு தேக்கரண்டி தேனை 100 மில்லி நீரில் கலந்து தினமும் 2 வேளை சாப்பிட, உடல்வெப்பம் தணியும். தண்ணீர்விட்டான் நெய் அல்லது ‘சதாவரி கிருதம்’ என்னும் மருந்தை ஒரு தேக்கரண்டி தினமும் இரு வேளை சாப்பிடலாம். குங்கிலியப் பற்பம் என்னும் மருந்தை 500 மில்லி கிராம் இளநீரில் கலந்து சாப்பிட உடல் குளிர்ச்சியடையும். நாவறட்சி, உட்சூடு தணியும். நாவறட்சி, உதடு வெடிப்பு நீங்க குங்கிலிய வெண்ணெயை உதடு, நாவின் உட்புறம் தடவவேண்டும்.

உணவில் கத்தரி, முருங்கை மற்றும் அத்திப்பிஞ்சுகள், வாழைப்பூ, பீர்க்கு, புடலையை அதிகம் சேர்க்கலாம். புளியாரை, மிளகு தக்காளி, காசினிக்கீரை, தாளிக் கீரை,மல்லிக்கீரை, அரைக்கீரை, முள்ளங்கி கீரை, வெந்தயக் கீரையை அடிக்கடி சாப்பிடலாம். உளுந்து, துவரை, பச்சைப்பயறு, வெந்தயக் கஞ்சி அடிக்கடி உட்கொள்ளலாம். வெங்காயம், சீரகம், சோம்பை உப உணவாக பயன்படுத்தலாம்.நெய், பால், தயிரை அதிகம் சேர்க்க வேண்டும். உஷ்ண வீரியமுள்ள கோழி, மீன் உணவுகளை தவிர்ப்பது நல்லது.

வியர்க்குரு, தோல் தடிப்பு நீங்க பனை நுங்கு சதையை வியர்க்குரு உள்ள இடங்களில் தடவ வேண்டும். வியர்வை, பூஞ்சை கிருமியால் ஏற்படும் சொறி, சிரங்கு, படை நீங்க வேப்பங்கொழுந்து, குப்பைமேனி இலையை அரைத்து தடவலாம்.

சிறுகதை

# மானம்

இருங்கோவேள்

மரபு வேந்தன் தனது நடவடிக்கைகளால் போக்கிலி என்ற பெயரைச் சம்பாதித்து விட்டான் அந்தச் சுற்று வட்டாரத்தில். மக்களில் சிலரும், காவல் துறையும் தான் அப்படி ஒரு பெயரை அவனுக்குக் கொடுத்திருந்தார்கள்.

மரபு வேந்தன் அந்தப்பட்டத்துக்காக? பெருமை கொண்டதில்லை. மாறாக, நாம் அதிகமாக நன்மைதானே செய்திருக்கிறோம். பின்னர் ஏன் நம்மை தீயவனைப் பார்ப்பது போல் பார்க்கி றார்கள் என்று தனக்குள்ளே வேதனைப் பட்டுக் கொள்வான். ஏழை எளியவர்கள் தன்னிடம் உதவி என்று கேட்டுவிட்டால் இருக்கிற யாரிடமாவது பறித்தாவது கொடுத்து விடுவான். இப்படிப்பட்ட செயல்களை அவன் தொடர்ந்து செய்து வந்ததால் காவல்துறை அவனை அடிக்கடி சிறை வைப்பது நடந்து கொண்டே இருந்தது. இந்த முறை மரபு வேந்தனுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை என்று நீதியரசர் தீர்ப்பெழுதி விட்டார். அதை எதிர்த்து மேல் முறையீடு செய்யவில்லை அவன். இரண்டு ஆண்டு இருந்து விட்டு வருவோம் என்ற எண்ணத்துடன் சிறைக்குச் சென்று விட்டான். சிறையில் இருந்து அவனை அவனது மனைவி அம்புஜம் அடிக்கடி வந்து பார்த்துச் சென்று கொண்டிருந்தாள். அவள் வந்து போவதை கவனித்துக்கொண்டிருந்த ஹரி என்ற காவலர் பங்கஜத்திடம் பேச்சுக்கொடுத்து அவளுக்கும் அவளது கணவனுக்கு உதவுவது போல் காட்டிக் கொண்டான். அவளும் அவனை நம்பி, ஹரியை தனது வீட்டுக்கு வரும்படி அழைக்கும் அளவிற்கு வந்து விட்டாள். இருவரும் ஒருவராகிப் போனார்கள்.



யார் மூலமும் இத்தகவல் சிறையிலிருக்கும் மரபு வேந்தனுக்கு தெரியாத வண்ணம் ஹரி பார்த்துக் கொண்டான்.

மரபு வேந்தனின் சிறைவாசம் முடிந்து வீட்டிற்குத் திரும்பினான். அம்புஜத்தின் நடவடிக் கைகளில் சிறிது மாற்றத்தைக் கண்டான். நண்பர் களிடம் இதைப்பற்றி பேசும் போது அவர்கள் உண்மையைச் சொல்லிவிட்டனர். மனைவியிடம் இதுபற்றிப் பேசிய மரபு வேந்தன், ஹரியுடன் உள்ள தொடர்பை விட்டுவிடு என்றான். அவளோ, நான் யாருடனும் எந்தத் தொடர்பிலும் இல்லை. நீங்கள் என்னை வீணாகச் சந்தேகப்படுகிறீர்கள். உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை, ஆதலால்தான் இப்படிப் பேசுகிறீர்கள் என்று கள்ள அழுகையுடன் பேசினார் அம்புஜம்.

மரபு வேந்தனுக்கு இவர் சொல்வதெல்லாம் உண்மையாகவே இருக்க வேண்டும் என்று தோன்றியது. நாட்கள் நகர்ந்தன. மரபு வேந்தன் ஒரு தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக மற்றொரு நகரத்தில் இருக்கும் நண்பனைப் பார்க்கப் போவதாகச் சொல்லி விட்டுச் சென்றான். பேருந்து நிறுத்தத்தில் பேருந்துக்காக காத்திருந்தபோது, பார்க்கப் புறப்பட்ட நண்பரே எதிரில் வந்து கொண்டிருந்தார். மரபு வேந்தனுக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. இருவரும் அருகில் இருந்த உணவு விடுதிக்குச் சென்று சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டே பேசினர். உதவுவதாக அவர் சொன்னார். வருகிற புதன் கிழமை வீட்டுக்கு வாருங்கள் என்று கூறி விட்டு விடைபெற்றார். மரபு வேந்தன் வீடு திரும்பினான்.

வீட்டிற்கு முன்பு ஒரு இரண்டு சக்கர வண்டி நின்று கொண்டிருந்தது. யாருடையதாயிருக்கும் என்று யோசித்துக் கொண்டே அருகில் சென்று பார்த்த போது அதில் போலீஸ் என்று எழுதப்பட்டிருந்தது. அவனுக்கோ பொட்டில் அறைந்தார்போல் இருந்தது. வீடோ சாத்தப் பட்டிருந்தது. இவள் நம்மிடம் கூறியது அனைத்தும் பொய்யோ என்று சந்தேகம் ஏற்பட்டது.

நேராக வீட்டுக் கதவைத் தட்டாமல், பக்கத்துத் தெருவில் உள்ள தனது நண்பனின் வீட்டிற்குச் சென்றான். அவனிடம் நல்ல பொருளா கொடுடா என்று கேட்டான். நண்பனோ நீ வெளியில வந்து முழுசா ஒரு வாரங்கூட ஆகல, அதுக்குள்ள எதுக்குடா பொருளு என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே, அறைக்குள் புகுந்து ஒரு அருவாளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். நண்பன் அவனைப் பின் தொடர்ந்து “யாரையும் எதுவும் பண்ணிடாதே“ என்று சொல்லிக் கொண்டே வந்தான்.

இவர்களைத் தெருவில் பார்த்தவர்கள் ஏதோ நடக்கப்போகுது என்று பேசிக்கொண்டனர். சிலர் அவர்களைப் பின் தொடர்ந்தனர். நேராக வீட்டுக்கு வந்த மரபு வேந்தன் கதவைத் தட்டாமல் ஜன்னல்களை திறக்க முயன்றான். ஒரு ஜன்னலை மட்டும் திறக்க முடிந்தது. உள்ளே அவன் கண்ட காட்சி அவனை சினத்தின் உச்சிக்கே கொண்டு போய் விட்டது. அடியே...என்று சொல்லமுடியாத வார்த்தைகளைப் பேசினான். இரண்டு நிமிடங்களில் கதவு திறந்து போலீஸ் ஹரி வெளியே வந்தான் அரைகுறையாய். மரபு வேந்தன் அருவாளுக்கு வேலை கொடுத்தான். இரண்டு தெரு மக்கள் கண்ணெதிரில் அவனை வெட்டிக் கொன்றான். அவன் உயிர் பிரிந்ததா, இல்லையா என்று கூடப்பார்க்காமல் வீட்டிற்குள் நுழைந்து அம்புஜத்தையும் வெட்டினான். ரத்தம் படிந்த அருவாளும் கையுமாக வெளியில் வந்த மரபுவேந்தன். தன் நண்பனிடம், நான் காவல் நிலையம் சென்று சரணடையப் போகிறேன் என்று சொன்னான்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தில், ஐம்பது வயதைத் தாண்டிய ஒருபெண்மணி. நீ சரணடையாதே! நீதான் கொன்றாய் என்று சொல்லாதே. அவர்களாகவே வெட்டிக்கொண்டு செத்தார்கள் என்று நாங்கள் சொல்லுகிறோம். நீ அருவாளைப் போலீஸ்காரன் கையில் திணித்துவிட்டு, காவல் நிலையத்தில் புகார் செய். நாங்கள் சாட்சி சொல்லுகிறோம் என்று அவனுடன் புறப்பட்டு காவல் நிலையத்தில் புகார் செய்தார்கள்.

காவல்துறை சம்பவ இடத்திற்கு வந்தது விசாரித்தது. இருவரும் வெட்டிக்கொண்டு செத்தனர். காரணம் தெரியவில்லை என்று தெரு மக்கள் கூறினர். அத்துடன் அந்த விசாரணை முடிந்து போனது. மரபு வேந்தன் அந்த வீட்டை விற்று விட்டு, தான் உதவி கேட்ட அந்த நண்பரது ஊருக்குச் சென்று, அவருடன் சேர்ந்து தொழில் செய்தான். போக்கிலி என்ற பெயர் மறைந்தது. தொழிலதிபர் என்ற பெயர் பெற்றான் நான்காண்டுகளுக்குப் பிறகு தன்னை விரும்பிய ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். அவனுக்குள் குற்ற உணர்வு ஒன்றும் இல்லை. ஏனென்றால், அவள் செய்த தவறை மன்னித்து, அவளிடம் இனிமேல் செய்யாதே என்று சொல்லியும், அவள் அதை மதிக்காததற்கு கிடைத்த பரிசுதான் அந்த மரணம் என்று அவன் மனசாட்சி உரக்கச் சொன்னது.

உணவுக்கு மணமூட்டும் பொருளாகவே பொதுவாகக் கருதப்படும் கறிவேப்பிலை, கணக்கற்ற மருத்துவ குணங்களையும் கொண்டிருக்கிறது. அதனால்தான், நாட்டு மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் கறிவேப்பிலை அதிகம் பரிந்துரைக்கப்படுகிறது.

கறிவேப்பிலையில் 63 சதவீதம் நீரும், 18.7 சதவீதம் மாவுச் சத்தும், 6.4 சதவீதம் நார்ச்சத்தும், 6.1 சதவீதம் புரதமும், 4 சதவீதம் தாது உப்புகளும், ஒரு சதவீதம் கொழுப்பும் இருக்கின்றன.

சுண்ணாம்புச்சத்து, மக்னீசியம், இரும்புச்சத்து, தாமிரச்சத்து, கந்தகச் சத்து, குளோரின் போன்றவையும் கறிவேப்பிலையில் உள்ளன. கறிவேப்பிலையை பச்சையாகவோ அல்லது ஜூஸ் போல தயாரித்தோ சாப்பிடலாம். நாம் சாப்பிடும் உணவுகள் செரிமானம் ஆகாமல் இருந்தால் கொழுப்புகள் படிந்து தொப்பை ஏற்படும். கறிவேப்பிலையை தினமும் காலையில் சிறிதளவு உட்கொண்டு வந்தால் கொழுப்புக்களைக் கரைப்பதுடன், உடல் செயலியல் மாற்றத்தையும் அதிகரிக்கும்.

கறிவேப்பிலை, உடலில் உள்ள நச்சுகளையும் வெளியேற்றுகிறது. எனவே உடல் எடை அதிகரிப்பதை தடுக்கிறது.

கெட்ட கொழுப்புகளை எரிக்கும் பொருள் கறிவேப்பிலையில் அதிகம் உள்ளது– எனவே, கொலஸ்ட்ரால் பிரச்சினையால் அவதிப்படும் நபர்கள் இதை தினமும் காலையில் உட்கொண்டு வரலாம்.

கறிவேப்பிலையில் இரும்பு மற்றும் போலிக் ஆசிட் அதிகம் உள்ளதால், உடலின் அனைத்துப்பாகங்களுக்கும் சீராக ஆக்சிஜன் கிடைக்க வழிவகை செய்கிறது. அதன் மூலம் உடலில் ரத்த அணுக்கள் குறைந்துவிடமலும் பாதுகாக்கிறது.

இதில் ஆன்டி பாக்டீரியா நிறைந்துள்ளதால் சருமத்துக்குப் பொலிவைக் கொடுக்கிறது. கறி வேப்பிலையை பேஸ்ட் போல அரைத்து அதனுடன் மஞ்சள் சேர்த்து, பருக்கள் உள்ள இடத்தில் தடவினால் பருக்கள் மறைந்துவிடும்.

கறிவேப்பிலையை அதிகமாக உட்கொள்ளும் போது ரோமத்தில் கருமை காக்கப்படும். ரத்தத்தில் சர்க்கரை அளவை கறிவேப்பிலை குறைப்பதால், சர்க்கரை நோயாளிகளுக்கு இது மிகவும் ஏற்றதாகும். அவர்கள், உணவில் கறிவேப் பிலையை தாராளமாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.



# அறிந்து கொள்ளுங்கள்:
# எழுத்து வேறுபடுதலால் பொருள் மாறுபடுதல்:

சொற்களில் ஒலி வேறுபாட்டினாலும், ஓர் எழுத்து இருக்க வேண்டிய இடத்தில் வேறு எழுத்து இடம் பெறுவதாலும் பொருள் மாறுபடும். லகர, ளகர, ழகரங்களையும், ணகர, நகர னகரங்களையும், ரகர, றகரங்களையும் சரியாக அமைத்து எழுதப்பயிலல் வேண்டும்.

ல,ள,ழ - வேறுபாடு அறிக:

1. அலை - கடல் அலை அலைந்து திரிதல்
அளை - தயிர், பிசை, புற்று
அழை - கூப்பிடு

2. இலை - மரம், செடி, கொடிகளின் இலை, தழை
இளை - மெலிந்து போதல்,
இழை - செய், நூலிழை

3. உலை - சமைக்க உலைவைத்தல், உலைக்களம்
உளை - பிடரிமயிர், வேறு
உழை - பாடுபடுதல், உழைப்பு, பக்கம்

4. ஒலி - ஓசை
ஒளி - வெளிச்சம், பதுங்கிக்கொள்
ஒழி - அழித்துவிடு, தொலைத்துவிடு, நீக்கு

5. கலை - வித்தை, கலைந்து போதல்
களை - வயலில் களையெடுத்தல், முகத்தின் ஒளி
கழை - மூங்கில்

6. கிலி - அச்சம், பலம்
கிளி - ஒரு பறவை
கிழி - துண்டாகக் கிழித்தல், கோடு கிழித்தல்

7. தலை - முதன்மை, உடலுறுப்பு
தளை - கட்டு
தழை - புல், இலை முதலியன

8. தாலி - கணவன் மனைவிக்குக் கட்டும் சின்னம்
தாளி - ஒருவகைப் பனை, குழம்பு தாளித்தல்
தாழி - குடம், வாயகன்ற பாண்டம்

9. வலை - மீன்பிடி வலை
வளை - பொந்து, வளையல், வளைவு
வழை - ஒருவகை மரம், சுரபுன்னை மரம்

10. வால் - விலங்கின் வால்பகுதி, வெண்மை
வாள் - வெட்டும் கருவி, ஒளி பொருந்திய, போர்வாள்
வாழ் - உயிர் வாழ், பிழைத்திரு? வாழ்க

11. வாலை - இளம்பெண்
வாளை - ஒருவகைமீன்
வாழை - மரவகை

12. அலகு - பறவை, மூக்கு
அளகு - பெண் பறவை
அழகு - வனப்பு

13. அலி - பேடி
அளி - கொடு
அழி - கெடு

14. ஆல் - ஆலமரம்
ஆள் - ஒரு மனிதன்
ஆழ் - மூழ்கு, அமுக்கு

15. உலவு - நட
உளவு - ஒற்று
உழவு - நிலஉழவு

16. எள் - எண்ணெய்வித்து
எல் - கதிரவன்

17. கலி - துன்பம்
களி - மகிழ்ச்சி
கழி - மிகுதி

18. சூல் - கருப்பம்
சூள் - சபதம் ஆணை
சூழ் - திட்டமிடு

19. அளித்தல் - ஈதல்
அழித்தல் - கெடுத்தல்

20. கலம் - ஒரு முகத்தில் அளவு
களம் - இடம்

21. கல் - பாறை
கள் - மது

22. தால் - நாக்கு
தாள் - பாதம்
தாழ் - பணி

23. பொலி - விளங்கு
பொளி - கொத்து
பொழி - ஊற்று

ரகர, றகர வேறுபாடு:

1. அரம் - ஒரு கருவி
அறம் - தருமம்

2. அரி - வெட்டு, திருமால்
அறி - தெரிந்துகொள்

3. அரை - பாதி, மாவாக்கு
அறை - வீட்டின் பகுதி

4. அரிவை - பெண்
அறிவை - நீ அறிவாய்

5. இரங்கு - இரக்கப்படு
இறங்கு - கீழே வா

6. இரத்தல் - யாசித்தல்
இறத்தல் - சாதல்

7. இரும்பு - ஓர் உலோகம்
இறும்பு - புதர்

8. இரை - தீனி
இறை - கடவுள் அரசன்

9. உரவு - வலிமை
உறவு - சொந்தம்

10. எரி - நெருப்பு
எறி - வீசு

11. ஒரு - ஒன்று
ஒறு - தண்டி

12. கரை - ஓரம்
கறை - அழுக்கு

13. குரங்கு - ஒரு விலங்கு
குறங்கு- தொடை

14. குரவர் - பெரியோர்
குறவர் - குறவர் மக்கள்

15. கூரிய - கூர்மையான
கூறிய - சொன்ன

16. கூரை - வீட்டின் மேல் கூரை
கூறை - புதிய ஆடை

17. கோரல் - விரும்புதல்
கோறல் - கொல்லுதல்

18. சிரை - நீக்கு, போக்கு
சிறை - சிறைச்சாலை

19. சீரிய - மேலான
சீறிய - கோபித்த

20. சொரி - பொழிதல் (கொட்டுதல்)
சொறி - தினவு (நோய், அறிப்பு)

21. தரி - அணி (ஆடை, அணிகலன்)
தறி - வெட்டு, நெசவு செய்

22. திரை - அலை திரைச்சீலை
திறை - வரி

23. துரவு - கிணறு
துறவு - துறந்து விடுதல், நீங்குதல்

24. துரை - பிரபு
துறை - நீர் நிலையில் இறங்கும் இடம், கல்வித்துறை

25. நரை - தலைமுடி வெளுத்தல்
நறை - மணம்

26. நிரை - வரிசை, பசுக்கூட்டம்
நிறை - எடை (நிறுத்தல் அளவை)

27. பரந்த - பரவிய
பறந்த - பறந்துவிட்ட

28. பரவை - கடல்
பறவை - பறப்பன

29. பரி - குதிரை
பறி - பிடுங்கு

30. பாரை - கடப்பாரை
பாறை - கற்பாறை

31. பெரு - பெரிய (உருவில்பெரியது)
பெறு - அடை (பெற்றுக்கொள்ளுதல்)

32. பொரி - நெல்பொரி
பொறி - இயந்திரம்

33. பொருதல் - போர்செய் (சண்டைசெய்தல்)
பொறு - பொறுத்துக்கொள்

34. மரம் - தாவர வகை
மறம் - வீரம்

ணகர னகரச் சொற்களின் வேறுபாடுகள்:

1. மணம் - வாசனை
2. மனம் - உள்ளம்
3. வண்மை - ஈகை
4. வன்மை - உறுதி
5. தண்மை - குளிர்ச்சி
6. தன்மை - இயல்பு
7. பணி - தொழில்
8. பனி - குளிர்
9. ஊண் - சோறு
10. ஊன் - மாமிசம்

---

புலவர். கு. ஏழுமலை

# கோயில் சொத்துகளை மீட்கும் வழக்கில் உச்சநீதி மன்றத்தில் வீரத்தமிழர் முன்னணி

தமிழர்களின் தொன்மை வழிபாட்டு முறை இயற்கையைச் சார்ந்தது. இயற்கையை மட்டும் வணங்கிவந்த தமிழர்களின் வழிபாட்டுமுறை பிறகு மக்களில் தலைவனை, தனது குடியில் வாழ்ந்து மறைந்த முன்னோரை வணங்கி வந்தது. அதன் தொடர்ச்சியாக ஆசீவகம் என்ற மூடநம்பிக்கையற்ற ஒரு மெய்யியல் ஒழுகலாறு, அதனைத் தொடர்ந்து வீரசைவம் என்று தமிழர் மெய்யியல் வளர்ச்சியடைந்தது.

இந்தத் தமிழர் சமுதாயத்தில் ஆரியத்தின் வருகை தமிழர்களின் தொன்ம அடையாள மான தமிழர் மெய்யியலில் கைவைத்து, பிறப்பின் அடிப்படையில் சாதிய படி நிலையை உருவாக்கி தமிழர் மரபினைத் திரித்துத் தந்து மரபுகளைக் கலந்து, ஆரியத்தை ஏற்றுக்கொள்ளாத திராவிட பகுத்தறிவு அறிவாளிகள் அவர்கள் சொன்ன வர்ணா சிரம படிநிலைகளை ஏற்றுக் கொண்டு அதை எதிர்த்துப் போராடுகிறோம் என்ற பெயரில், தமிழ் இனத்தை ஒரு தொன்ம மெய்யியல் அடையாளமற்ற ஒரு இனமாகக் காட்டி வரலாற்றைத் திரித்து ஆவணப்படுத் தியது.

உண்மையில் ஆரியமோ, திராவிடமோ தமிழர்களுடைய பண்பு அல்ல. தமிழர்கள் தனித்த வரலாற்றுப் பெருமைகள் கொண்ட இனம் என்பதே வரலாற்று உண்மை.

இந்தத் துரோக வரிசையில் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கோவில்களையும் அந்தக் கோவில் களுக்குச் சொந்தமான சொத்துகளை யும் நிலங்களையும் இந்துசமய அறநிலையத் துறை என்ற துறையின் கீழ் கொண்டு வந்தது அரசு. இது தவறானது என்றபோதும் பெருவாரியான சொத்துகள் தனித்த பார்ப்பன



குருமார்களிடமிருந்தும் இந்ததுத்துவா சாமியார் களிடம் இருந்தும் பொதுமைப்படுத்தப்பட்டது ஒருவகையில் சிறு ஆறுதல். இன்றைய சூழலிலும் சில சொத்துக்கள் பொதுமைப்படுத்தப்படாமல் தமிழர்களின் தொன்ம அடையாளங்களை அழித்தும், பெறு மதியான தமிழர் சொத்துக்களை ஆரிய பார்ப்பனர்களும் அவர்களோடு கைகோர்த்த வகையில் திராவிடர்களும் அனு பவித்து வருகின்றனர்.

இந்து சமய அறநிலையத் துறை என்ற பெயரை மாற்றி தமிழர் மெய்யியல் துறை என்ற தனித்த துறை ஒன்றை உருவாக்க வீரத்தமிழர் முன்னணி போராடி வருகிறது.

இந்நிலையில், கோவையைச் சேர்ந்த தயானந்த சரஸ்வதி சாமி, “கோவில் மற்றும் ஆசிரம நிரவாகத்தில் ஊழல் இருப்பதாகச் சந்தேகிக்கும் பட்சத்தில் அந்த நிர்வாகத்தையும், கோயிலின் சொத்துக்களையும் இந்துசமய அறநிலையத்துறை யின் நேரடி கண்காணிப்பில் எடுத்தக் கொள்ள வழிவகை செய்யும் சட்டப்பிரிவு மூன்றை“ நீக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து இருந்தார்.

அதாவது இந்தச் சட்டப்பிரிவை நீக்குவதன் மூலம் அந்தந்த கோவில்களில் பணிபுரியும் பார்ப்பனர்களுக்கும் ஆசிரமங்களின் சொத்தை அந்தந்த இந்துத்தவா சாமியர்களுக்கும் மட்டுமே உரிமையாக அறிவிக்க வேண்டும் என்று 2012 உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடரப்பட்டு இருந்தது.

இந்த வழக்கைப் பொறுத்தவரை, எந்தக் கோயில்களும் அதன் சொத்துக்களும் ஆசிரமங் களும் பொதுவானது இல்லை. அந்தந்த கோவில் களும் ஆகம விதிகளை வைத்து வேதம் ஓதுகின்ற பிராமணர்களுக்கும் தலைமைக் குருமார்களுக்கும் சொந்தமானது என்றும் அதே போல ஆசிரம சொத்துக்கள் அனைத்தும் அந்தந்த சாமியார்களின் கீழ் இருக்க வேண்டும் என்றும் அவற்றைப் பொதுமைப்படுத்தக் கூடாது என்றும் வழக்குத் தொடுக்கப்பட்டள்ளது.

வழக்குத் தொடுக்கப்பட்ட தயானந்தசரஸ்வதி இறந்து விட்ட நிலையில், வழக்கு இப்போது உச்சநீதி மன்றத்தில் நடைமுறைக்கு வர, இந்த வழக்கின் தயானந்த சரஸ்வதி தரப்பு இணை வழக்கராக சுப்ரமணிய சுவாமி தனது மனுவின் மூலம் இணைந்துள்ளார்.

இந்த சூழலில் கோவில் மற்றும் ஆசிரம சொத்துக்களை தனிநபருக்குச் சொந்தமானதாக அறிவிக்கக்கோரிய தயானந்த சரஸ்வதி அவர்களின் வழக்குக்கு எதிராக வீரத்தமிழர் முன்னணி தமிழக அரசு வழக்கோடு தன்னையும் இணைவழக்கராக இணைத்தக் கொண்டுள்ளது. இதற்காக வீரத்தமிழர் முன்னணி 12 நியாயமான காரணங்களை முன்வைத்து இணை வழக்கராக இணைத்துள்ளது. இந்த வழக்கு 207 - 2016 அன்று விசாரணைக்கு வந்தது. அப்போது இரண்டு இணை வழக்குகள் பதிவானதால் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப் பட்டது.

விசாரணைக்கு வந்த வழக்கில் தயானந்த சரசுவதிக்கு ஆதரவாகத் தன்னை இணைத்துக் கொள்ளத் துடித்த சுப்ரமணிசாமி அவர்கள் எதிர்த்தரப்பில் வீரத்தமிழர் முன்னணி இணை வழக்கராக இணைய கடும் எதிர்ப்பை உச்சநீதிமன்றத்தில் பதிவு செய்தார்.

“வீரத்தமிழர் முன்னணி, இந்துத்துவாவிற்கு எதிரானது. சீமான் இந்துக்களை விமர்சிப்பவர், வீரத்தமிழர் முன்னணி அமைப்பு பிரபலமான அமைப்பு இல்லை“ என படபடத்துப் போன சுப்ரமணியசாமி மற்றும் தயானந்த சரசுவதித் தரப்பு வழக்கறிஞர்கள் நெருக்கடியில் இருக்கின்றனர். சுப்ரமணியசாமியின் விண்ணப்பம் போலவே வீரத்தமிழர் முன்னணியின் இணைவழக்கு விண்ணப்பமும் உச்சநீதி மன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.


இந்த வழக்கில் இந்துத்துவாவின் வேண்டு கோளிற்கு இணங்க தமிழக அரசு தனது மெத்தனப் போக்கைக் கடைபிடித்தாலும் வீரத்தமிழர் முன்னணி விடாது.

களத்தில் நேரடியாக இந்துத்துவா சக்திகளை எதிர்த்து சட்டப் போராட் டத்தில் வீரத்தமிழர் முன்னணி இறங்கியுள்ளது.

கட்டாயம் சட்டப்போராட்டத்தில் வீரத்தமிழர் முன்னணி வெல்லும். இந்த வழக்கு தொடர்பாக எமக்கு ஆதராவகக் கைகோர்க்கும் கரங்களை வீரத்தமிழர் முன்னணி வரவேற்கிறது.

**வீரத்தமிழர் முன்னணி**

தமிழர்நாடு 09442248351.




# உடல் என்னும் கடிகாரம்

நமது உடல், ஒவ்வொரு உடல் பாகத்திற்கென தனித்தனியே கடிகாரத்தின் அலாரத்தை முன்பதிவு செய்து கொண்டு சுழன்று கொண்டிருக்கிறது.

ஒவ்வொறு உறுப்புக்கும் அதன் பணியை செய்து முடிக்க இரண்டு மணி நேரம் ஒதுக்கியுள்ளது. இரண்டு மணி நேரம் முடிந்ததும் மீண்டும் அலாரத்தை அடுத்த உறுப்புக்கு மாற்றி விடுகிறது.

விடியற்காலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை நுரையீரலின் நேரம்.

இந்த நேரத்தில் சுவாசப் பயிற்சி செய்து காற்றின் மூலம் வரும் பிராண சக்தியை உடலுக்குள் அதிகமாகச் சேகரித்தால் ஆயுள் நீடிக்கும்.

தியானம் செய்யவும் ஏற்ற நேரம் இது. ஆஸ்துமா நோயாளிகள் இந்த நேரத்தில் மிகவும் சிரமப்படுவார்கள்.

விடியற்காலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை பெருங்குடலின் நேரம்.

காலைக்கடன்களை இந்த நேரத்துக்கள் முடித்தே தீர வேண்டும். மலச்சிக்கல் உள்ளவர்கள் இந்த நேரத்தில் எழுந்து கழிவறைக்குச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நாளடைவில் மலச்சிக்கல் தீரும். உயிரணுக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ள நேரமும் கூட இதுவே.

காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை வயிற்றின் நேரம்.

இந்த நேரத்தில் கல்லைத் தின்றாலும் வயிறு அரைத்து விடும். காலை உணவை பேரரசன் போல் உண்ண வேண்டும் என்று சொல்வார்கள். இந்த நேரத்தில் சாப்பிடுவதுதான் நன்கு செரிமானமாகி உடலில் ஒட்டும்.

காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை மண்ணீரலின் நேரம்.

காலையில் உண்ட உணவை மண்ணீரல் செரித்து ஊட்டச்சத்தாகவும் ரத்தமாகவும்

மாற்றுகிற நேரம் இது. இந்த நேரத்தில் பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்கக்கூடாது. மண்ணீரலின் செரிமான சக்தி பாதிக்கப்படும். நீரிழிவு நோயாளி களுக்கு மோசமான நேரம் அது.

முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை இதயத்தின் நேரம்.

இந்த நேரத்தில் அதிகமாகப் பேசுதல், அதிக மாகக் கோபப்படுதல், அதிகமாகப் படபடத்தல் கூடாது. இதயம் பாதிக்கப்படும். இதய நோயாளிகள் மிகமிக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நேரம்.

பிற்பகல் 1.00 மணி முதல் 3.00 முதல் வரை சிறு குடலின் நேரம்.

இந்த நேரத்தில் மிதமாக மதிய உணவை உட்கொண்டு சற்றே ஓய்வெடுப்பது நல்லது.

பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சிறுநீர்ப்பையின் நேரம்.

நீர்க்கழிவுகளை வெளியேற்ற சிறந்த நேரம்.

மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை சிறுநீரகங்களின் நேரம்.

பகல் நேர பரபரப்பிலிருந்து விடுபட்டு அமைதி பெற, எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க, தியானம் செய்ய, வழிபாடுகள் செய்ய சிறந்த நேரம்.

இரவு 7.00 மணி முதல் 9.00 மணி வரை, பெரிகார்டியத்தின் நேரம்.

பெரிகார்டியம் என்பது இதயத்தைச் சுற்றி இருக்கும் ஒரு ஜவ்வு இதயத்தின் Shock absorber இரவு உணவுக்கு உகந்த நேரம் இது.

இரவு 9.00 மணி முதல் 11.00 மணி வரை டிரிப்பிள் கீட்டர்நேரம். இது ஒரு உறுப்பல்ல.

உச்சந்தலை முதல் அடி வயிறு வரை உள்ள மூன்று பகுதிகளை இணைக்கும் பாதை. இந்த நேரத்தில் உறங்கச் செல்வது நல்லது.

இரவு 11.00 மணி முதல் 1.00 மணி வரை பித்தப்பை இயங்கும் நேரம்.

இந்த நேரத்தில் தூங்காது விழித்திருந்தால் பித்தப்பை இயக்க குறைபாடு ஏற்படும்.

இரவு 1.00 மணி முதல் விடியற்காலை 3.00 மணி வரை கல்லீரலின் நேரம்.

இந்த நேரத்தில் நீங்கள் உட்கார்ந்திருக்கவோ விழித்திருக்கவோ கூடாது.

கட்டாயம் படுத்திருக்க வேண்டும். உடல் முழுவதும் ஓடும் ரத்தத்தை கல்லீரல் தன்னிடத்தே வரவழைத்து சுத்திகரிக்கும் நேரம் இது. இந்தப் பணியை நீங்கள் பாதித்தால் மறுநாள் முழுவதும் சுறுசுறுப்பில்லாமல் அவதிப்படுவீர்கள்.

**இமயவரம்பன்**

## பஞ்சு அருணாச்சலம் பழம்பெரும் திரை ஆளுமை

தமிழ்த் திரையுலகில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக வசனகர்த்தா, தயாரிப்பாளர், பாடலாசிரியர், இயக்குநர் என்று பல துறைகளில் சாதனை களைச் செய்தவர் பஞ்சு அருணாசலம். இவர் மாரடைப்பு காரணமாக 8.8.2016 அன்று காலமானார். பஞ்சு அருணாசலத்துக்கு மீனா என்ற மனைவியும், சண்முகம், பஞ்சு சுப்பு ஆகிய மகன்களும், கீதா, சித்ரா ஆகிய மகள்களும் உள்ளனர்.

பஞ்சு அருணாசலம் 1941-ம் ஆண்டு காரைக்குடி அருகேயுள்ள சிறுகூடல் பட்டியில் பிறந்தார். பட அதிபர் ஏ.எல்.சீனிவாசன், கவிஞர் கண்ணதாசன் ஆகிய இருவரும் இவரது சித்தப்பாக்கள். கதை எழுதுவதில் ஆர்வம் கொண்ட அவர் கண்ணதாசனிடம் உதவியாளராக இருந்து தனது கலைப் பயணத்தை தொடங்கினார்.

1962-ல் வெளியான 'சாரதா' படத் துக்கு பஞ்சு அருணா சலம் எழுதிய, 'மணமகளே மருமகளே வா வா' என்ற பாடல் அவருக்கு பெரும் புகழைத் தந்தது. ஆரம்ப நாட்களில் 'ஹலோ பார்ட்னர்' என்ற படத்துக்கு இவர் கதை எழுதியுள்ளார். இதில் நாகேஷ் நாயகனாக நடித்துள் ளார். பின்னாளில் இவர் திரைக் கதை - வசனம் எழுதி தயாரித்த 'அன்னக்கிளி' படம் பெரும் வெற் றியைப் பெற்றது. இந்தப் படத் தின் மூலம்தான் இசைஞானி இளையராஜா இசையமைப் பாளராக அறிமுகமானார்.

ரஜினிகாந்த் நடித்த 'ஆறிலிருந்து 60 வரை', 'எங்கேயோ கேட்ட குரல்', 'குரு சிஷ்யன்', 'வீரா', கமல் நடித்த 'கல்யாணராமன்', 'ஜப்பானில் கல்யாணராமன்', 'மைக்கேல் மதன காமராஜன்', பாக்யராஜ் இயக்கி, நடித்த 'ராசுக்குட்டி', விஜயகாந்த் நடித்த 'அலெக்ஸாண்டர்', சேரன் கதாநாயக னாக அறிமுகமான 'சொல்ல மறந்த கதை', சூர்யா நடித்த 'பூவெல்லாம் கேட்டுப் பார்' உட்பட பல படங்களை இவர் தயாரித்துள்ளார்.

சிவாஜி நடித்த 'வாழ்க்கை', 'அவன்தான் மனிதன்', ரஜினி நடித்த 'ராஜா சின்ன ரோஜா', 'பாயும் புலி', 'எங்கேயோ கேட்ட குரல்', 'முரட்டுக் காளை', கமல் நடித்த சிங்காரவேலன், 'உயர்ந்த உள்ளம்', 'தூங்காதே தம்பி தூங்காதே', 'சகலகலா வல்லவன்'உட்பட 25-க் கும் மேற்பட்ட படங்களுக்கு திரைக் கதை எழுதியுள்ளார். 'புதுப்பாட்டு', 'கலிகாலம்', 'தம்பி பொண்டாட்டி' ஆகிய படங்களை இயக்கியுள்ளார். இவர் கதை - வசனம் எழுதி தயா ரித்த 'எங்கேயோ கேட்ட குரல்' படத்துக்கு சிறந்தப் படத்துக்கான தமிழக அரசின் விருது கிடைத் துள்ளது. தமிழக அரசின் கலை மாமணி விருது உட்பட ஏராளமான விருதுகளை அவர் பெற்றுள்ளார்.



# சங்கம் 4

## தென் மதுரைத் தமிழ் விழா!

## தமிழர் தொழில் வணிக வேளாண் பெருமன்றம்

தமிழராக இருக்கிற நான் தமிழின் வளர்ச்சிக்கு அதிகமான அளவில் நற்செயல்களைச் செய்ய வேண்டும் என்ற மாபெரும் முயற்சியுடன் பல்வேறு செயல்பாடுகளை தமிழுலகத்திற்கு கொடையாகக் கொடுத்துக் கொண்டிருக்கும் அருட்தந்தை ஜகத்கஸ்பார் அவர்கள் சங்கம் 4 என்ற நிகழ்வையும் நடத்திக் கொண்டிருக்கின்றார். அவருடன் நல்லி தயம் படைத்த பலர் அவருக்கு தோள் கொடுத்து உதவிக் கொண்டிருக்கிறன்றர். தமிழின் பெருமை அறிந்த, தாய்மொழிப் பற்றுக் கொண்ட பல உள்ளங்கள் இவரது சேவைகளை வரவேற் கின்றார்கள்.

பேராயர் பெருந்தகை அந்தோணி பாப்புசாமி, பாத்திமா கல்லூரி முதல்வர் பாத்திமா மேரி, அருட்சகோதரி புளோரா, மகாத்மா பள்ளிகளின் முதல்வர் பிரேமலதா, அருட்தந்தை ஆனந்தம் போன்ற தமிழ் நெஞ்சங்கள் இந்நிகழ்வு சிறப்பாக நடக்க உழைத்து வருகின்றனர். தமிழர் தொழில் வேளாண் பெருமன்றம் (CTACIS) இந்நிகழ்வு கள் சிறப்பாக நடந்தேற ஆதாரமாக இருக்கின்றது.

முதல் உலகத் தமிழர் உரையாடல் என்ற நிகழ்ச்சி மதுரையில் சங்கம் 4 சார்பாக ஆகஸ்ட் 12ஆம் நாள் முதல் ஆகஸ்ட் 21ஆம் நாள்வரை நடக்க இருக்கிறது. இதனை முன்னெடுக்கும் நிகழ்வாக ஜூலைத் திங்கள் இறுதியில் கீழடிக்கு தமிழ்ப் பயணம் நடந்தது. வரலாற்றாய்வாளர் களுடன் உரையாடலும் நடந்தது.

எழுபது நாடுகளில் வாழும் தமிழர் வரலாறு அறியும் முயற்சியைத் துவங்கவும் இலங்கைப் போரில் கைம்பெண்களான 80,000 பேரின் மறுவாழ்விற்கான வழிகளைச் சிந்திக்கவும்,






# சங்கம் 4

## நாட்டுப்புற ஒலிம்பிக்ஸ்
## RURAL OLYMPICS

**ஆகத்து 16, 17**
**பாத்திமா கல்லூரி**

**சிலம்பம், சடுகுடு, கிளித்தட்டு, வழுக்குமரம் ஏறுதல், இளவட்டக் கல் ,உறியடி, மல்லர் கம்பம், தாயம், பல்லாங்குழி, களரி, வளரி, மாட்டு வண்டித் தோரணம், கிட்டிப்புள், கோலி, பம்பரம், வடம் இழுத்தல், ஏழு கல்லாட்டம், மட்டாங்கல், குதிரை சில்லாக்கு..... இன்னும் பல. தமிழகத்தில் முதன்முறையாக ஒழுங்கமைவுடன் நடக்கும் நாட்டுப்புற ஒலிம்பிக்ஸ்.**



தமிழரின் அறிவு, கலை, பண்பாடு மறுமலர்ச்சி காணும் வகையில் சங்கம் 4 நடைபெற உள்ளது. முக்கியமாக ஈழப்போரில் கணவனை இழந்த தமிழ்ப்பெண்களின் குழந்தைகளில் 200 பேரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 12ஆம் நாள் மதுரை பாத்திமா கல்லூரியில் நடக்கும் துவக்க விழாவில், ஒடிசா மாநில கூடுதல் தலைமைச்செயலர் பாலகிருஷ்ணன் பங்கேற்கிறார். தொடர்ந்து ஆகஸ்ட் 21 வரை பல நிகழ்ச்சிகள் பாத்திமா கல்லூரி மற்றும் பில்லர் மையத்தில் நடக்கிறது.

ஆகஸ்ட் 16,17 தேதிகளில் பாத்திமா கல்லூரியில் பள்ளி மாணவர்களுக்கான சிலம்பம், சடுகுடு, கிளித்தட்டு, இளவட்ட கல், உறியடி, தாயம், பல்லாங்குழி, களரி, கிட்டிப்புல், ஏழுகல்லாட்டம், மட்டாங்கல் போன்ற நாட்டுப்புற ஒலிம்பிக் போட்டிகள் நடக்கின்றன. ஆகஸ்ட் 21ஆம் நாள் தமுக்கம் மைதானத்தில் டிரம்ஸ் சிவமணியின் இசை நிகழ்ச்சி நடக்கிறது. பேராசிரியர் கு. ஞானசம்பந்தன், கவிஞர் வைரமுத்து பேசுகின்றனர்.

**விதைநெல்கள்.**

அருட்தந்தை ஜகத்கஸ்பார் ராஜ் அவர்கள் மலேசிய நிகழ்வில் கலந்து கொண்டு வந்த பின் கூறியதாவது:

பயனுள்ள மலேசியப் பயணம். இத்துணை எழுச்சியை எதிர்பார்க்கவில்லை. நிகழ்வுகளின் கட்டமைப்பும் மேடை ஒழுங்கும் அற்புதம். நம்மை பன்மடங்கு விஞ்சி விட்டார்கள். மலேசிய சிஜிகிசிமிஷி தலைவர் சரணவன் அவர்களின் தலைமைத்துவமும் அணியினரின் ஈடுபாடும் சிலிர்ப்பூட்டின. தமிழ் இனத்திற்கான விதை நெல்கள் பல கண்டேன். வழக்கறிஞர் பாண்டிதுரை, பொத்திப் பாதுகாக்கப்பட வேண்டிய பெருவிதை.

சிஜிகிசிமிஷி என்பது Confederation of Tamil Agriculture, Commerce , Industry and Services. தமிழர் தொழில் வணிக வேளாண் பெருமன்றம். தமிழ் உறவுகளே, ஒன்று மறவாதீர்கள், பழைய பேருலகில் முதல் தமிழ்ப் பேரரசு இராசேந்திர சோழனால் அமைக்கப்பட்டது. மலேசியா உள்ளிட்ட தென்கிழக்காசிய நிலப் பரப்போடான வணிக உறவுகளை மையமாகக் கொண்டுதான், புதிய உலகில் தமிழரின் மீள் எழுச்சிக்கான பொருண்மிய இயங்கியலும் இதே நிலப்பரப்பில் தான் நிகழப்போவதை என் அகக் கண்களில் காண்கிறேன். ஆனந்த தமிழ் கிறக்கம் கொள்கிறேன். அதனை நிகழ்த்திக் காட்டப்போவது CTACIS பெருமன்றம் தான். குறித்துக் கொள்ளுங்கள்.

# முதலாம் உலகத் தமிழர் உரையாடல்

12ஆம் தேதிமாமதுரை சங்கம் 4 முதலாம் உலகத் தமிழர் உரையாடலாகத் தொடங்கும். தொடக்கவிழா அரங்கு மதுரை பாத்திமா கல்லூரி வளாகம்.ஒடிசா மாநிலகூடுதல் தலைமைச் செயலரும். ஆய்வறிஞரும், தமிழில் முதுகலை பயின்று ஆட்சிப் பணித் தேர்வினை வென்ற மதுரை யின் புதல்வருமான திரு. பாலகிருஷ்ணன் IAS கீழடி பற்றிவரலாற்றுப் பேருரை நிகழ்த்தி சங்கம் 4னை தொடங்கி வைப்பார்.ரொமிலா தாப்பர் போன்ற வரலாற்றாசிரியர்கள்கூடதமிழ் இனத்தை கீழடி கண்டறியப்பட்டவரைஇனக்குழு (tribal ethinic group)என்றுதான் சுருக்கினார்கள்.நாகரீகமாக (Civilization) ஏற்கவில்லை. சங்கப்பாடல்களை கவிஞர்களின் வெறுங் கற்பனை என்று நிராகரித் தார்கள். சிந்துவெளியைத் தவிர நகர்ப்புற நாகரீகம் எதுவும் இருக்கவில்லை என்று அறுதியிட்டு அறிவித்தார்கள். இவைஅனைத்தையும் 41/2 கி.மீ. சுற்றளவில் அமைந்த, 2200 ஆண்டுகளுக்கு முந்தைய, வைகைநதிக் கரையோரம் எழுந்த கீழடி நகர் நாகரீகக் கண்டுபிடிப்பு தகர்க்கிறது.

கீழடியை கண்டெடுத்தஅமர்நாத் ராமகிருஷ்ணா தலைமை யிலான குழுவினர் அனைவருக்கும் சங்கம்4 தொடக்கவிழாவில் தமிழர் தொழில் வணிக வேளாண் பெருமன்றம் (CTACIS) சிறப்பு செய்கிறது. இந்தியவரலாற்றின் அடி நாதங்களுக்கு மறு உள்ளீடுகள் தரும் கீழடியை மேற்கொணர்ந்த இந்த அகழ்வாய்வு நாயகர்களுக்கு சங்கம் 4 தொடக்க விழாவில் ஈராயிரம் பேர் எழுந்து நின்று கரவொலிப் பெருமிதம் தருவர், நமது வேண்டுகோள்: இம்மாபெரும் சாதனைபாராளுமன்றக் குறிப்பில் பதிய வேண்டும். சட்டப் பேரவையில் சிறப்பு பாராட்டுத் தீர்மானம் பெறவேண்டும். அனைத்து அரசியற்கட்சிகளும் இணைந்து பாராட்டு விழா நடத்த வேண்டும்.

தொடக்கவிழா நிகழ்வில் உலகத் தமிழர்களின் உள்ளங்கவர்ந்த பேராசிரியர் கு.ஞானசம்மந்தம் மாமதுரை பேருரை நிகழ்த்துவார்.நானறியஆழ்ந்த தமிழறிவும் கொண்ட திரைப்படஇயக்குநர் ரிதம், கேளடி கண்மணி போன்ற வெற்றிப்படங்களைத் தந்தவர் வசந்த் சாய்வழிகாட்டுதலில் பாத்திமா கல்லூரிமாணவியர் கலைநிகழ்ச்சி படைக்கிறார்கள். நாட்டுப்புறக் கலைஞர்களும் இணைகிறார்கள். சென்னை சங்கமம் நாட்களை இந்நிகழ்ச்சி நினைவூட்டும்.

சங்கம் 4, தமிழுக்கான தமிழ் நிலம், மக்களுக்கானஉரத்தக்குரல், சலிப்பின்றி, சவால்களை எதிர்கொண்டு, இடைவிடாது இயங்குகிறோம் .வாழ்த்துக்கூற விரும்புகிறவர்கள் இச்செய்தியை பகிர்ந்து உதவுங்கள்.

**ம. ஜெகத் கஸ்பார்**

நிறுவனர் காப்பாளர், சங்கம் 4.

## தமிழியல் ஆய்வு நிறுவனம்
Research Institute of Tamilology


ஆஸ்திரியாவின் வியன்னா பல்கலைக்கழகத்தில் இந்தியவியல் சார்ந்து 56 இருக்கைகள் உள்ளன. அனைத்துமே சமஸ்கிருதம் சார்ந்தவை. ஒன்று கூட தமிழ் சார்ந்து இல்லை. இது ஓர் சிறிய உதாரணம். உலகம் முழுதும் அறிவு மையங்களில் இதுதான் தமிழின் கதை. உலகெங்கும் தமிழர்கள் வாழ்ந்த போதும் அறிவுப் புலங்களில் தமிழை நிறுவனமயப்படுத்துவதில் நாம் தவறிவிட்டோம். ஹார்வர்ட்

பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவுவதற் காக நடைபெற்று வரும் முயற்சிகளையும், அதற் கான நிதி திரட்டுவதிலுள்ள சவால்களையும் நாம் பார்க்கி றோம். அரசுகள் நினைத்தால் இப்பணி யினைச் செய்வது எளிது. ஆனால் இந்தியாவைப் பொறுத்த வரை இந்தியவியல் Indology என்ற சமஸ்கிருதப் பெரும்பிரிவின் துக்கடா வாலாகத் தான் தமிழ் நிறுத்தப்படுகிறது.

தமிழகத்தைப் பொறுத்த வரை அறிவுசார் நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கான அரசியல் அக்கறை இழக்கப்பட்டு பல காலம் ஆயிற்று. அவ்வப்போது உதயச்சந்திரன் போன்ற நல்ல அதிகாரிகள் பொறுப்பெடுக்கும்போது மட்டும் துளிர் விடும். எளிய தமிழர்களின் தன்னார்வ முயற்சிகளில்தான் தமிழ் தட்டுத் தடுமாறி தன்னை தக்கவைத்துக்கொள்ள போராடுகிறது. அத்தகு தன்னார்வ முயற்சிகளுக்கு நிறுவனக் களம் உருவாக்குவதற்காக சங்கம் 4 மேற்கொள்ளும் வரலாற்றுப் பணியே தமிழியல் ஆய்வு நிறுவனம் Research Institute of Tamilology .

வெளிநாட்டு மாணாக்கருக்கு தமிழ் கற்றுக் கொடுத்தல், தமிழ் சார்ந்த ஆய்வு ஆக்கங்களை ஆங்கிலத்தில் வெளிக் கொணர்தல், தமிழர் சார் பல் புல ஆய்வு முயற்சிகளை (தமிழர் வரலாறு, தத்துவம், அறிவியல், தருக்கம், சமூகவியல், வானியல், கடலியல், கணிதவியல்)...ஊக்குவித்தல் ஆகியவற்றை முதற்கட்டப் பணிகளாக வரையறுத்துள்ளோம். தமிழ், ஆங்கிலம், ஜெர்மனியம், பிரெஞ்சு, சமஸ்கிருதம் என பல்வேறு மொழிகளில் ஆழ்ந்த அறிவு கொண்ட பேரறிஞர் அருட்திரு. டாக்டர். ஆனந்த் அமலதாஸ் இந்நிறுவனத்திற்கு முதற் தலைமை தருகிறார். இதற்கான கட்டி முடிக்கப் பட்ட இடத்தை நூலகத்தோடு தந்துதவும் மதுரை நாகமலை பில்லர் மையத்தின் நிறுவனர் அருட்திரு. டாக்டர். இம்மானுவல் அவர்களுக்கு தமிழ்ச் சமூகம் மிகவும் நன்றிக் கடன்பட்டுள்ளது. மேனாள் துணைவேந்தர்கள், தமிழறிஞர்கள் பலரும் இந் நிறுவனத்தை இணைந்து வழிநடத்த இசைந் துள்ளனர். அரசுகள், பெரு நிறுவனங்களின் உதவி யின்றி முரட்டுத் துணிவுடன் இம்முயற்சி தொடங் கப்படுகிறது. தமிழுலகிற்கு சங்கம் 4ன் வரலாற்றுப் பெருங்கொடை இது. தமிழ்ச் சமூகம் துணை நிற்கும் என்ற நம்பிக்கையில் மட்டுமே தொடங்குகிறோம். தந்தை தனிநாயகம் அடிகள் கண்ட கனவு இது. துணை தருவீர். உடனடி தேவைகள் நான்கு : 1. பதிப்பு நின்றுவிட்ட அரிய தமிழ் புத்தகங்கள் வைத்திருப்பவர்கள் நகல் தந்து உதவலாம். 2. புகழ் பெறாமல் ஆனால் மிகச் சிறந்தவர்களாயிருக்கும் தமிழறிஞர்களை எமக்கு அறியத்தரலாம். 3. தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு சீரிய மொழி பெயர்ப்பும் செய்யும் திறனுடையோர் தங்கள் திறமையை கொடையாகத் தரலாம். 4. முதல் மூன்று ஆண்டு கால நிதித் தேவைகளை திரட்டுவது சவால் நிறைந்தது. நிதியுதவி தரலாம்.

ம. ஜெகத் கஸ்பார்
நிறுவனர் காப்பாளர், சங்கம் 4.



# சுடுகின்ற தனிமை

பிரபுவின் கடிதம் மாநில கவர்னரின் கைகளில், குறிஞ்சி மலர் இதழ்களில் நெருஞ்சி முள்ளாக உறுத்திக் கொண்டிருந்தது? காந்தியவாதியான அவர், அந்த மனுவை ஜீரணிக்க இயலாமல் புயல் காற்றில் தென்னையைப் போல தடுமாறினார்.

பிரபு, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள ஒரு ஹோட்டலில் வேலை செய்து கொண்டிருப்பவன். பார்ப்பதற்கு ஆள் நல்ல வாட்டசாட்டமாக இன் செய்த பேண்ட்டில் கம்பீரமாக இருப்பவன். ஆனால், எனக்கு நடைபாவனையில் மட்டும் ஏன் இந்த வித்தியாசம், என்று அனலில் இட்ட புழுவாகத் துடித்துக் கொண்டிருக்கிறான்?

கவர்னர், உதவியாளரை அழைத்து பட படத்தார், இந்தக் கடிதம் எங்கிருந்து எழுதப்பட்டது என்பதை உடனே கண்டுபிடியுங்கள். அந்தப் பிரபுவை உயிருடன் மீட்கும் சவாலை நாம் ஏற்றாக வேண்டும். பொழுது விடிவதற்குள் அந்த நபர் இங்கு என் முன்னால் இருக்க வேண்டும். ஹரியப்... ஹரியப்...?? என்று உதவியாளர்களை விரட்டினார்,

கவர்னரின் பிரதம உதவியாளர், கவர்னரின் உத்தரவை மாநகர காவல்துறைக்கு தெரிவிக்க, கால்துறையினர் உடனே இரவோடு இரவாக தேடுதல் வேட்டையை துவக்கினார்கள்.

பிரபு, சிந்தாதிரிப்பேட்டையில் மத்திய சிறைச் சாலையின் பின்புறம் உள்ள கூவம் ஆற்றுப் பாலத்தில் ஏதோ யோசனையுடன் நடந்து கொண்டிருக்கிறான்.

அங்கு, ஒரு புடவை கட்டிய திருநங்கை “டே மாமா!...ம்..வரியா“ என்று கண்ணடித்து ஒரு மாதிரியாக நெளிந்து கை தட்டிக் கூப்பிட்டார்.

பிரபு, தன்னுடன் பணியாற்றும் ஊழியர்கள்.. .டே...பிரபா என்று தன்னை கிண்டலடிப்பதை நினைத்துப் பார்த்து இந்த திருநங்கை மாற்றிக்



கூப்பிடுவதை ரசித்தபடி அருகில் உள்ள பூங்கா நகர் ரயில்வே தண்டவாளத்தை கடக்க முயன்றான்.

அங்கும், சில திருநங்கைகள் நின்று கொண்டு, அவ்வழியே வருவோர் போவோரை கைதட்டிக் கூப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

வழிப்போக்கர்களோ! அவர்களைப் பார்த்து, சேற்றுப் பன்றியைக் கண்டு ஒதுங்குவது போல ஒதுங்கி "டே! ஒன்பதுங்கடா" என்று தங்களுக்குள் கிசுகிசுத்து திரும்பித் திரும்பி பார்த்த வண்ணம் சிரித்துக் கொண்டே சென்றனர்.

பிரபு, அந்த அலிகளை பரிதாபமாகப் பார்த்தான். பாவம் இவர்கள் வேறு வழியில்லாமல் இதைச் செய்வதும், பொதுமக்கள் இவர்களை மனிதப் பிறவியாகவே மதிக்காமல் அவமதிப்பதும் கொடுமையடா சாமி என வேதனைப்பட்டான்.

இந்த இரண்டும் கெட்டான் நிலைமைக்கு ஒரு முடிவு காண வேண்டும் என தீவிரமாக யோசித்தான்.

பிரபுவை கண்டுபிடிக்க நியமிக்கப்பட்ட காவல் துறையின் தனிப்படையினர், சென்னை மாநகரின் பல்வேறு இடங்களை சல்லடைப்போட்டு அலசிக் கொண்டிருந்தனர்.

பிரபு, ரயில்வே நடை மேம்பாலத்தில் ஏறி இறங்கி, ரிப்பன் பில்டிங் காம்பவுன்ட் கேட் வந்தடைந்தான்.

அங்கு, ஒரு அழகான கம்பீரமான வாலிபன் நடந்து போய் கொண்டிருக்க, இவரின் பார்வை கொக்கி அவன் மேல் விழுந்து, அந்த வாலிபவனின் அழகில் மயங்கி சொக்கி அவன் பின்னாலேயே சென்றான்.

சே! இதென்ன கேவலமான ஆசை, நாமும் பேண்ட்சர்ட்டில் இருந்து கொண்டு இன்னொரு ஆணின் பின்னால் பெண் பிள்ளையைப் போல செல்வதா? ஆண்டவனே என்னை ஏன் இப்படிப் படைத்தாய், என நின்று அந்த வாலிபனை ரசித்துக் கொண்டே, சுய கௌரவ மிகுதியால் வாய்விட்டு புலம்பினான்.

அந்த பிளாட்பாரத்தில் நடப்பவர்கள், இவன் தனக்குள் முனகுவதைப் பார்த்து, அடடே! இவன் பைத்தியம் போலருக்கு...பாக்க நல்லாதான் இருக்கான், என்று முனு முனுப்புடன் சென்றனர்.

அதில் ஒருவன், பிரபு தனக்குள் பேசி அபிநயிப்பதைப் பார்த்து ஏதோ புரிந்து கொண்டவன் போல தலையை மேலும் கீழும் ஆட்டிய படி, பிரபுவை நோக்கி டே...ஸ்ஸ் என்று ரகசிய குரல் கொடுத்தான்.

சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த பிரபுவை அந்த மைனர், கண்ணடித்து முகத்தை சாய்த்து சிக்னல் கொடுத்துவிட்டு அருகில் இருந்த வி.சி.ஹால் காம்ப்பவுண்ட் உள்ளே இருளில் மறைந்தான்.

மைனரின் சிக்னலைப் புரிந்து கொண்ட பிரபு, சற்று முன் ஆண்டவன் மேல் கோபப்பட்டதை மறந்து ஆசை ஆசையாக அவன் பின்னால் சென்றான்.

திடுதிப்பென்று அவனுக்குள் இருந்த சுயமரியாதை வேலைசெய்ய சடாரென திரும்பி இருள் பகுதியை விட்டு, ஜனநடமாட்டம் உள்ள இடத்துக்கு நடக்க ஆரம்பித்தான்.

முன்னால் சென்று, பாலுணர்ச்சி, மிகுதியால் காத்திருந்த மைனர், "டே டே...ஸ்...ஸ்.இந்தா...காசு தரேன்", என்று கிசுகிசுத்துக் கொண்டே சிறிது தூரம் பின்னால் ஓடி வந்தான்.

பிரபு, மைனரிடமிருந்து தப்பிக்க திரும்பிப் பாராமல் வேகமாக நடந்து ஜனக்கூட்டத்தில் கலந்து அப்பாடா என்று பெருமூச்சு விட்டான்.

இவர்களின் நடவடிக்கையை கவனித்துக் கொண்டிருந்த ஒரு விவரமான செருப்புத் தைப்பவன், "ம்...இதென்னா உல்டாவாகீதே வழக்கப்படி இவன்தான் அவனை தொறத்தணும் இப்ப என்னவோ படா தமாசா கீதே....ம் இவன் ஓடுறான். அவன் ஓட வேண்டியவன் துரத்துறானே" என யோசனையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டே இழுத்து புகைவிட்டுக் கொண்டிருந் தான்.

சுயமரியாதைக்கும், கட்டுப்படுத்தமுடியாத உணர்ச்சிக்கும் இடையில் மரத்திலிருந்து உதிரும் இலை, காற்றின் சுழற்சியில் சுழன்று சுழன்று விழுவது போல அல்லாடும் இந்த இழிவான உடலை இனிமேலும் நான் சுமக்க வேண்டுமா? என்ற மனப்புழுக்கத்தில் இருந்த பிரபு, ஒரு முடிவுக்கு வந்தவனாக தங்கியுள்ள இடம் நோக்கி வேகமாக நடை போட்டான்.

ஹோட்டலில் சர்வராக வேலை செய்யும் நான், கஸ்டமர்களிடம் டிப்ஸ் கேட்டு இதுவரை தலை

சொறிந்ததில்லை. கிடைக்கும் சம்பளமே போதும் என்று நினைக்கும் தன்மானச்சிங்கம்.

தாய் தந்தை யாரென்றே தெரியாத நான், ஒரு அநாதை என்றே நினைத்ததில்லை. எனக்கு நானே, என் அறிவு என் திறமை என் குணம் தான் உண்மையான சொந்தம் என்று முடிவுகட்டி சந்தோஷமாக வாழும் செருக்கன்.

பள்ளிப் படிப்பு படிக்க முடியவில்லையே என வருந்தியதில்லை. எவ்வளவோ இலக்கியம் படித்து போதிய அறிவு, ரசனையை விருத்தி செய்துள்ளேன்.

அப்படிப்பட்ட நான்...இப்படி இப்படி...யாரோ ஒருவன் என்ன கைதட்டிக் கூப்பிடவும், நானும் அவன் பின்னால் ஒரு நாயைப் போல ஓடவும் படைத்தாயே பிரம்மா! மூன்றாம் பாலினத்தவர் நாங்கள், நீ அரைத் தூக்கத்தில் படைத்த படைப்பா? என்று தன் அரைப் பிறப்பை நொந்து கொண்டே நடந்தவன், மத்திய சிறைச்சாலையின் முன்னால் உள்ள இரயில்வே தண்டவாளத்தை கடக்கும்போது நின்று ஏதோ யோசனை செய்தான்.

பிரபுவை கண்டுபிடிக்க நியமிக்கப்பட்ட காவல்துறையின் தனிப்படையினர், பிரபுவின் கடிதம் தபாலில் சேர்க்கப்பட்ட இடத்தை வைத்து சிந்தாதிரிப்பேட்டை முழுவதும் வலைவீசி விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள்.

பிரபு, ஹோட்டல் ஊழியர் அறையில் உட்கார்ந்து தன் பிறவியை சுடுகின்ற தனிமையை நினைத்து வருந்தினான். பின்னர் ஆவேசமாக தன் நிலைமையை விளக்கி கருணை மனு எழுத ஆரம்பித்தான்.

எழுதி முடித்த வெள்ளைக் காகிதத்தை மடித்து, கவரில் போட்டு மேதகு ஆளுநர், ராஜ்பவன், தமிழ்நாடு என்று விலாசம் எழுதி விரைவு தபாலில் அனுப்ப அண்ணாசாலையில் உள்ள தலைமை தபால் நிலையத்தை அடைந்தான்.

நான் ஒரு அரவாணி, பிரபு என்கிற பிரபா என் பெயர். என் இனத்துக்கு சமூகத்தில் மரியாதை வேண்டும். எங்களுக்கு ஓட்டு போடும் உரிமை வேண்டும். சொத்துரிமை வேண்டும், அரசு வேலைவாய்ப்பு வேண்டும். இவர்களும் மனிதர்களே! என்ற சமூக அங்கீகாரம் வேண்டும் என்ற இந்த கோரிக்கைகளை அரசு தாமதிக்காமல் நிறைவேற்ற வேண்டும். அதற்கு எனது தற்கொலைதான் பரிகாரமாக இருக்கும் என்று முடிவெடுத்துள்ளேன்.

என் தற்கொலையாவது உங்கள் போன்றவர்களுக்கு என் போன்றவர்களின் மனவலியை புரியவைக்கும் என்ற நம்பிக்கையில் நாளை அதிகாலை சாகப்போகும் பிரபு என்கிற பிரபா என்ற கடித வாசகத்தை, கவர்னர் மீண்டும் மீண்டும் நினைத்து உறக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்தார்.

கவர்னர், மாநகர காவல்துறையை வயர்லஸ்ஸில் விசாரித்தார்.

தீவிரமாக தேடிக் கொண்டிருக்கிறோம், என்ற வழக்கமான பதிலால் வருத்தமடைந்து, முதலமைச்சரை தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

தீவிரமாக சில கருத்துக்களை விவாதித்தார்.

முதல்வர் அதை ஒப்புக் கொண்டதில் நிம்மதியடைந்து உறங்கச் சென்றார்.

அதிகாலையில் கவர்னரின் மனித நேயம் வளர்ப்போம், என்ற தலைப்பிலான மனிதத் தன்மையை வலியுறுத்தும் பதிவு செய்யப்பட்ட உரை தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

அதே நேரம் வானொலியில் முதலமைச்சரின் உரை ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

மத்திய சிறைச்சாலையின் முன்னால், ரெயில்வே தண்டவாளத்தில் இருள் விலகியும் விலகாத அதிகாலை நேரத்தில் ஏதோ கூட்டம் கூடி நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது.

கவர்னர், அவ்வழியே கோவிலில் சாமி தரிசனம் செய்ய சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது வயர்லஸில் பிரபுவை கண்டுபிடித்தாயிற்றா? என்று காவல்துறையிடம் விசாரித்தார்.

தேடிக் கொண்டிருக்கிறோம், எப்படியும் மீட்டு விடுவோம் என்றனர். மேம்பாலத்தின் கீழே மக்கள் கூட்டமாக நிற்

பதைப் பார்த்து காரை நிறுத்தச் சொன்னார்.

மேம்பாலத்தின் அடியில் மத்திய சிறைச்சாலையின் எதிரில் ரயில்வே தண்டவாளத்தில், உடல் நூறு துண்டாகச் சிதறி, இரத்தக் கூழான

நிலையில் சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க பிணம் ஒன்று கிடக்க, சுற்றி நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தில் மென்மையான மனம் படைத்த சில பெண்கள் ஐயையோ! ஐயையோ! யாருபெத்த புள்ளையோ! என்று அழுது கொண்டிருந்தனர்.

அங்கு கவர்னர் நடந்து வருவதைக் கண்ட பொதுமக்கள், விலகி வழிவிட, போலிஸ் படை கவர்னரைச் சுற்றி பாதுகாப்பு அரண் அமைத்து பிணத்தருகே அழைத்து வந்தனர்.

அந்த இடத்தில் பிரபுவின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படமும், அவன் முதல் நாள் கவர்னருக்கு எழுதிய கடித நகலும் கிடக்க, காவல்துறை அதைக் கைப்பற்றினர்.

அதைக் கொண்டு இந்த இரத்தக் கூழ், பிரபு என்கிற பிரபா என்று உறுதி செய்து கொண்ட கவர்னர், நேற்று இரவு முதல்வரிடம் பேசியபோது, திருநங்கையரின் நல்வாழ்விற்கு அரசு எல்லா உதவிகளையும் செய்யும், என்று முதல்வர் உறுதியளித்ததை நினைத்துப் பார்த்தார்.

ஆனால் அதற்குள் பிரபு அவசரப் பட்டு விட்டதை நினைத்து, கலங்கிய கண்களுடன் கோயிலைத் தவிர்த்து, கோட்டைக்கு காரைவிடச் சொன்னார்.

அன்றைய மாலை செய்தித்தாளில் "பிரபு என்கிற பிரபா என்கிற திருநங்கை, ரயில் முன் பாய்ந்து தற்கொலை" என்ற செய்தி தலைப்புச் செய்தியாகி நாடெங்கும் அனுதாபத்துடன் பேசப்பட்டது.

அதே செய்தித்தாளில், திருநங்கைகளுக்கும் ஓட்டுரிமை, குடும்ப அட்டை, அரசுத்துறைகளில் வேலைவாய்ப்பு, சுயதொழிலுக்கான கடன் உதவி, சமூகத்தில் சம அந்தஸ்துக்கு உத்தரவாதம் போன்ற பிரபுவின் கோரிக்கைகள் விரைவில் அரசாணையில் வெளியிடப்படும் என்று அரசு அறிக்கை வெளியிட்டிருந்தது.

(இந்தக்கதை 2001 ஆம் ஆண்டில் எழுதப் பட்டது)

**கவிஞர். ந.இராஜாராம்,** சென்னை 78
9444350410

# பொது அறிவு தகவல்

முதன் முதலாக தொழில்புரட்சி நடைபெற்ற நாடு – இங்கிலாந்து

* குளோரினிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து பொருள் – குளோரோஃபார்ம்

* மனிதனுடைய உடல் உறுப்புகளில் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமாக இருப்பது – மூளையில் உள்ள செல்கள்

* எச்.பி.ஜே. பைப்லைன் திட்டமானது எதை கொண்டு செல்ல உருவாக்கப்பட்டது – இயற்கை வாயு

* இத்தாலி நாட்டின் தேசிய மலர் – லில்லி

* மின் விளக்கை கண்டுபிடித்தவர் – ஹம்ப்ளி டேவி

* ஒரு மணி நேரத்தில் 74 கி.மீ வேகத்தில் ஓடுவது – நெருப்பு கோழி

* ஏறும்புகள் உள்ள வகைகள் – 14,000 (அவைகள் ஒரு போதும் உறங்குவதில்லை)

* நயாகரா நீர்வீழ்ச்சியை கண்டுபிடித்தவர் – லூயிஸ் ஹெனபின்

* ஆசியாவில் முதன் முதலாக தொழில் மயமான நாடு எது – ஜப்பான்

* சூரிய குடும்பத்தில் அதிக வெப்பமான கிரகம் – புதன்

* சுறா மீனின் வாழ் நாள் – 20 முதுல் 30 ஆண்டுகள்

* கொசுக்களில் 3500 வகை உள்ளது

அது 2006ம் ஆண்டு. அப்போது நான் உதவி இயக்குநர். சென்னையின் சாலிக்கிராமத்தில் பிரசாத் லேப் இருக்கும் சாலையில் இருசக்கர வாகனத்தில் விரைந்துகொண்டிருந்தேன். லேப் எதிரேயிருந்த தேநீர்க் கடையிலிருந்து “ஜேசு“ என்ற கணீர்க் குரல். வண்டியை ஓரங்கட்டித் திரும்பிப் பார்த்தேன். நா. முத்துக்குமார் நின்றிருந்தார். என்னை இயற்பெயர் சொல்லி அழைக்கிற வெகுசில நண்பர்களில் முத்துக்குமாரும் ஒருவர். வண்டியைத் திருப்பி, கடைவாசலில் நிறுத்திவிட்டு முத்துவைப் பார்த்தேன்.

அவரது கையில் இருந்த கண்ணாடி டம்ளர் தேநீரிலிருந்து ஆவி பறந்துகொண்டிருந்தது. எனக்கு டீ சொல்லிவிட்டுத் திரும்பினார். “ஏன் ஜேசு இப்படிப் பண்ணீங்க? உதவி இயக்குநரா வேலை செய்யணும்னு எங்கிட்ட சொல்றதுல உங்களுக்கு என்ன ஈகோ?“ என்று அக்கறை கலந்த கோபத்துடன் கேட்டார். நான் பிரபலமான இயக்குநரிடம் உதவியாளராகச் சேரவில்லை என்பதில் அவருக்கு வருத்தம். தேநீர்க் கடைக்கு அருகில் அருணாசலம் சாலையில் இருந்த அவரது அலுவலகத்துக்கு அழைத்துப்போனார்.

எப்போது சந்தித்தாலும் ஜெயமோகன், சாரு நிவேதிதா தொடங்கி, கலாப்ரியா, கல்யாண்ஜி என்று நகர்ந்து, தற்போது படித்துக்கொண்டிருக்கும் புத்தகத்தைப் பற்றிக் கூறிய பின், “நாகராஜுவும் ஏர்னெஸ்டும் எப்படியிருக்காங்க?“ என்று என் முன்னாள் அறை நண்பர்களை விசாரித்துவிட்டு, தற்போது எழுதிக்கொண்டிருக்கும் பாடல்களைப் பற்றிப் பேச ஆரம்பித்துவிடுவார்.

அப்போது ‘வெயில்’ படத்தின் இசை வெளியாகியிருக்கவில்லை. அந்தப் படத்தில் இடம்பெற்ற ‘வெயிலோடு விளையாடி’ பாடலை எனக்குப் பாடிக்காட்டினார் முத்து. பாடுவதற்குமுன் “வெயிலை மட்டுமே வானமாகப் பார்த்து, புழுதியைச் சட்டையாக அணிந்து கொள்ளும் வறண்ட தென்தமிழக ஊரொன்றில் இந்தப் படத்தின் முதன்மைக் கதாபாத்திரங்கள் வாழ்கின்றன. அவர்களது பால்ய வாழ்வின் கொண்டாட்டத் தருணங்களை இந்தப் பாடல் சித்தரிக்கிறது“ என்று பாடலுக்கான சூழ்நிலையை விவரித்த பின் பாட ஆரம்பித்தார்.



# நா. முத்துக்குமார் எளிமையின் வழி தேடி வந்த வண்ணத்துப்பூச்சி!



இசை இல்லாமலேயே அவர் பாடப் பாடக் காட்சிகள் எனக்குள் விரிந்தன. அவர் பாடி முடித்ததும், "கிராமிய பால்யத்தின் பொதுக்கூறுகள் இந்தப் பாடலின் அனுபவமாக வசீகரிக்கின்றன. உங்களுக்கு இந்தப் பாடலுக்காக தேசிய விருது கிடைக்கலாம் " என்றேன். "விருது நமக்கு எப்போ கிடைக்கணும்ன்னு இருக்கோ அப்போ கிடைக்கட்டும் ஜேசு. அதுவரைக்கும் வெயிட் பண்ணுவோம்" என்றார் அமைதியாக.

### எளிமையின் ஆழம்

நிஜ வாழ்வில் மட்டுமல்ல; தன் கலை வாழ்விலும் எதிர்பார்ப்புகள் எதையும் வரித்துக்கொள்ளாத இந்த எளிமைதான் நா. முத்துக்குமாரின் தனித்த முத்திரை. முத்துகுமாரின் பிரபலமான கவிதைத் தொகுப்பாக 'பட்டாம்பூச்சி விற்பவன்' வெளியான பிறகுதான் இலக்கியப் பரிச்சயம் கொண்ட இளைய தலைமுறை சினிமா இயக்குநர்களுக்கு முத்துக்குமார் மீது ஈர்ப்பு ஏற்பட்டது. தமிழ் வாழ்க்கையின் யதார்த்த தருணங்களை உணர்ச்சிபூர்வமான காட்சி மொழியில் கவிதையாக்குவதற்கு முத்துகுமார் நம்பியது எளிமையைத்தான்.

*உயில் என்று தலைப்பிட்ட கவிதையில்ஞ்*

*'மகன் பிறந்த பிறகுதான்*
*அப்பாவின் பாசத்தை*
*அறிந்துகொள்ள முடிந்தது*
*என் அன்பு மகனே*
*உன் மகன் பிறந்ததும்*
*என்னை நீ அறிவாய்!'*

என்று எழுதியிருக்கிறார் முத்துக்குமார். ஆனால் அப்பாவைக் கொண்டாடியவர் அவர். தமிழாசிரியரான அவரது தந்தை, தனது ஊதியத்தின் 20 சதவீதத்தில் புத்தகங்கள் வாங்கிச் சேர்த்து, வீட்டிலேயே நூலகம் கட்டித் தன் மகனுக்குத் தமிழின் முகத்தைக் காட்டி வளர்த்தவர். அப்பா திறந்து காட்டிய புத்தக உலகம் தந்த அறிவு, பாட்டியின் பாசம், கிராமத்து வாழ்வின் அனுபவங்கள் ஆகியவற்றோடு சென்னை வந்த முத்துக்குமாரை நட்புலகம் ஆரத் தழுவிக் கொண்டதற்கு அவரது எளிமையும் அவரது தமிழின் எளிமையும்தான் ஆதாரமான காரணம். அடுத்து, யாரையும் நிராகரித்துவிடாத அவரது அன்புலகம்.

*'மாநகரத்துச் சாலைகளுக்கு*
*அவ்வப்போது உயிர் கொடுக்கிறது*
*தொட்டியில் பூத்த*
*ரோஜாச் செடிகளுடன்*
*வந்து போகும் மாட்டு வண்டி!'*

என்று நேசத்துடன் சென்னையின் வாழ்வை எழுதியவர் முத்து. "ஏன் இப்படி உங்களை வருத்திக்கிறீங்க முத்து? ஒழுங்கா தூங்குங்க" என்றால் "முத்துக்குமார் பாட்டு எழுத மாட்டேன்னு சொல்லிட்டாருன்னு யாரும் என்னைப் பத்தி சொல்லிடக் கூடாது ஜேசுஞ்" என்று அனைவரையும் திருப்திப்படுத்த நினைத்து ஓய்வின்றித் தன்னை உருக்கிக்கொண்ட இவரது திரைப்பாடல்கள் மெட்டுக்களில் ஒட்டிவைக்கப்பட்ட வெற்று வார்த்தைகள் அல்ல.

*'ஒரு வண்ணத்துப்பூச்சி*
*எந்தன் வழி தேடிவந்ததுஞ்*
*அதன் வண்ணங்கள் மட்டும்*
*இன்று விரலோடு உள்ளது'*

என்று எழுதி நவீனக் கவிதையைத் திரைப்பாடலுக்கு இடம்பெயர்த்துக் காட்டி அதில் வெற்றிபெற்ற கவிஞன்தான் முத்துக்குமார். இத்தகைய தொடர் முயற்சியின் மூலம் தமிழ்த் திரைப்பாடல்களில் நவீனத்தைப் பெருமளவில் புகுத்தியவர். கண்ணதாசனுக்கும் வைரமுத்துவுக்கும் பிறகு கற்பனை வளமும் எளிமையும் கூடிய கவிதை வடிவில் தமிழ் வாழ்க்கையின் வண்ணங்களைத் திரைப்பாடலில் தீட்டிக் காட்டியவர். இசையோடு இணைந்தும் பிணைந்தும் மனித உணர்வுகளை அழகிய வரிகளில் இழைத்துக் காட்டும் கலைத் தருணங்கள் நிறைந்த பாடல்களைத் தன் எளிமையான மொழியால் மிகக் குறுகிய காலத்தில் படைத்துக் காட்டி மறைந்திருக்கிறார் முத்துக்குமார்.

### நாம் இழந்த இயக்குநரும் இலக்கியவாதியும்

காஞ்சிபுரத்தில் கன்னிகாபுரம் கிராமத்தில் பிறந்து வளர்ந்த முத்துக்குமார் வீட்டருகே இருந்த பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை இயற்பியல் பயின்றவர். வேதியியல் பாடத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர். அதனாலோ என்னவோ அறிவியலோடு இணைந்து இயற்கையை நேசிக்கும் கவிஞனாக உருக்கொண்டார். 'நியூட்டனின் மூன்றாம் விதி' கவிதைத் தொகுப்பில் இருக்கும் கவிதைகள் இதற்கு உதாரணம். சென்னை வந்து பச்சையப்பன் கல்லூரியில் முதுகலைத் தமிழ் இலக்கியம் முடித்ததுமே தனக்குக் கிடைத்த தமிழாசிரியர் பணியைப் புறம்தள்ளிவிட்டு சினிமாவுக்குப் பாட்டெழுதக் கிளம்பினார். யாப்பிலணக்கத்தை முதுகலையில் முறையாகப்

பயின்று சங்க இலக்கியங்களை ஆர்வத்துடன் வாசித்து முடித்துவிட்டிருந்தாலும் அந்தப் புலமை எதையும் தன் கவிதையின் மொழியின் மீது அவர் திணித்துவிடவில்லை.

ஜென் தத்துவம் மீதும் ஜென் கவிதைகள் மீதும் தீராக் காதல் அவரிடம் இருந்துகொண்டேயிருந்தது. 'காட்டிலே காயும் நிலவு கண்டுகொள்ள யாருமில்லை' என்று எழுதிக் காதலின் ஏகாந்த மனநிலையை வெளிப்படுத்தியவர். 'மின்சாரக் கம்பி மீது மைனாக்கள் கூடு கட்டும்' என்று சாதியத்தை மீறி எழும் காதலை நவீனமாக உணர்த்தியவர். 'காற்றினில் கிழியும் இலைகளுக்கெல்லாம் காற்றிடம் கோபம் கிடையாது' என்று ஜென் தத்துவத்தை மிக எளிய காட்சிக் குறியீடுகளாகத் திரைப்பாடல்களுக்கு இடம்பெயர்த்தவர்

தொடர்ச்சியான இலக்கிய வாசிப்பும் திரை இயக்கத்தின் மீது பிடிப்பும் கொண்டிருந்த முத்துக்குமாரை ஒரு திரைப்பட இயக்குநராகவும் நாவலாசிரியராகவும் நாம் காண முடியாதபடி செய்துவிட்டது அவரது மறைவு. ஆனால், அவர் எழுதிச் சென்றிருக்கும் வரிகள் இனிவரும் காலங்களில் திரைப்பாடலை இலக்கியத்துக்கு அருகில் கொண்டுசெல்லும் முயற்சியில் முக்கியமான பங்களிப்பாக இருக்கும்.

**நன்றி : ஆர்.சி.ஜெயந்தன்**
**சினிமா – இந்து டாக்கீஸ் (தமிழ் இந்து)**



# சமுதாயப்பணி

பல சமுதாயப் பணிகளை சப்தமின்றி பெரிய அளவில் நிறைவேற்றி வரும் ஒரு அறக்கட்டளை என்று சொன்னால், அது நாகை மாவட்டம் சித்தாமூரைச் சேர்ந்த அன்னை அபூர்வம் அம்மாள் அறக்கட்டளை தான். முக்கியமாக படிக்கின்ற பிள்ளை களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் இந்த அறக்கட்டளை செய்து கொடுத்து வருகிறது.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவ மாணவி களுக்கு அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சித்தாமூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் இருந்து திருக்குவளையில் உள்ள தேர்வு மையமான எ.எம்.ஜி. மேல்நிலைப்பள்ளிவரை சென்று வர வாகன ஏற்பாடும் தரமான உணவு வசதியும் செய்த தந்தது அன்னை அபூர்வம் அம்மாள் அறக் கட்டளை.

பள்ளிப்பிள்ளைகளின் நெருக்கடியை உணர்ந்து அவர்களுக்கு ஆலோசனைகளும், அவர்கள்படிக்க ஆரோக்கியமான சூழலையும் இந்த அறக்கட்டளை ஏற்படுத்தி தந்து வருகிறது. இது போன்ற பல அறப் பணிகள் செய்கிற அன்னை அபூர்வம் அம்மாள் அறக்கட்டளையினர்க்கு நமது கலைப்பட்டறை சார்பில் வாழ்த்துகளும் நன்றிகளும். திருமிகு வைத்தியலிங்கம் அவர்களுக்கு நன்றி.

தேங்காய் எண்ணெயில் மஞ்சள்தூளை போட்டுக் குழைத்து உடம்பிற்கு தடவி, பயத்தமாவை தேய்த்துக் குளித்தாள் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

ஆரஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.

முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.

பருமனாக இருப்பவர்கள் எடையை குறைக்க தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு மூடி எலுமிச்சை பழச்சாற்றை பிழிந்து அதனுடன் அரை ஸ்பூன் தேன் கலந்து சாப்பிட்டால் எடை குறையும்.

நகங்களை வெட்டும் முன் எண்ணெயை தடவிவிட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.

கூந்தலில் எண்ணெய் பசை அதிகமாக இருந்தால், கோழி முட்டையில் கொஞ்சம் சர்க்கரையை கலந்து தலையில் லேசாக

# சித்த மருத்துவ அழகுக் குறிப்புகள்



தடவிக்கொண்டு பிறகு தலைக்கு ஊற்ற வேண்டும். இதனால் எண்ணெய் பசை நீங்கி முடி அழகு பெறும்.

தேநீரில் வடிகட்டிய பின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சை சாறை பிழிந்து, தலையில் தேய்த்துக் குளித்தால், தலைமுடி பளபளப்பாகும்.

வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் வோடிக்குரு வராமல், வெளியில் கறுத்துப் போகாமல் இருக்கும்.

இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு, கண்களை கழுவினால் கண்கள் பிரகாசமாக இருக்கும்.

கை, கால் முட்டிகளில் கறுப்பு நிறம் அதிகமாக இருந்தால், தொடர்ந்து அந்த இடத்தில் எலுமிச்சம்பழ சாற்றை தேய்த்து சோப்பு போட்டு குளிக்க வேண்டும் நாளடைவில் கறுப்பு நிறம் போய் விடும். தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஆலிவ் ஆயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.

இரவு படுக்கும் முன், புதினா சாறு இரண்டு தேக்கரண்டி, அரை மூடி எலுமிச்சம்பழ சாறு ஆகியவற்றுடன் பயிற்றம்பருப்பு மாவை கலந்து முகத்தில் தடவிக் கொண்டு பத்து நிமிடம் ஊறிய பிறகு ஐஸ் ஒத்தடம் கொடுக்க முகம் சுத்தமாகும். பருவினால் ஏற்பட்ட தழும்பும் மறையும்.

ஆப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.

முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

மோரை முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவினால் வறண்ட சருமம் புதுப் பொலிவடையும்.

பழுத்த வாழைப் பழத்தை நன்றாகப் பிசைந்து முகத்தில் தடவி, 20 நிமிடம் கழித்து கழுவினால், சருமம் மிகவும் மிருதுவாகும்.

ஆரஞ்சு பழத்தோலை வெயிலில் காயவைத்து பொடி செய்து பாலுடன் கலந்து சருமத்தில் தடவி அரைமணி நேரம் கழித்து கழுவி வந்தால், வெயிலில் ஏற்பட்ட கருமை மறையும்.

பால், கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.

தேங்காய்ப் பாலுடன் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து முகத்தில் ஐந்து நிமிடம் மசாஜ் செய்தால் சோர்வடைந்து சருமம் புத்துணர்ச்சி பெறும்.

தக்காளி பழத்தை இரண்டாக நறுக்கி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.

தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஆலிவ் ஆயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.



**காய்கறிகள் முதலில் தோன்றிய இடம்**

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு, தக்காளி | – தென் அமெரிக்கா |
| சீனிக்கிழங்கு | – தென் அமெரிக்கா |
| முட்டைக்கோஸ் | – ஐரோப்பா |
| பட்டாணி | – ஐரோப்பா |
| வெள்ளரி | – இந்தியா |
| வெங்காயம் | – எகிப்து |



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**

# வாழ்த்துகள்

'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தன்புகழ் நிறுவீஇ தான் மாய்ந்தனரே'



என்னும் புறநானூற்று பனுவல்
ஏற்ப நற்றமிழ் புலவர். கு.ஏழுமலை
தமிழாசான் 80 ஆண்டு அகவை
எய்தியமைக்கு 'சான்றோர் ஆயிரம்
பிரை கண்டவர் என்று போற்றுவர்'
ஆன்றோர் உரைக்கு ஏற்ப
அன்னாரை மண்ணும் வானும்
உள்ளவரை நீடுவாழ இறையருள் வேண்டி வாழ்த்துகிறோம்.

- இவண்



இளவல் ; K.சந்திரகீர்த்தி,



தங்கை :
J. சுலோச்சனா ஜெயசீலன்,



மைத்துனர் : K.ஜெயசீலன்,

மற்றும் **சரளி** நிர்வாகத்தினர் - திண்டிவனம் .

MUTRAM - Tamil & English Monthly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

